Registered at the G. P. O as a Newspaper
விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily    தேசிய தினசரி

போன் 389    தபாற் பெட்டி எண் 49

மலர் 4    யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 11 ஆம் நாள் ஷவ்வால் 17 (24 3-62) சனிக்கிழமை இதழ் 42




# அந்நியர் காணி வாங்க தடை!

## புதியசட்டம்விரைவில்வரும்

கொழும்பு, வெள்ளி

வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணிகள் வாங்குவது அதிகரித்துக் கொண்டே வருகிறதென்றும், இவ்விதம் அங்நியர்கள் இங்குள்ள காணிகளைச் சொந்தமாக்குவதைத் தடை செய்ய விரைவில் சட்டம் இயற்ற வேண்டுமென்றும் காணி, விவசாய, நீர்ப்பாசன மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார். மற்றைய நாடுகளில் இவ்வித சட்டம் இயற்றப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதற்கிடையில், கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களைத்தவிர வேறு காரணங்களுக்காக அங்நியர் இங்கு காணி வாங்குவதைத் தடை செய்ய அரசாங்கம் விரைவில் சட்டமியற்றவிருக்கிறது.

கொழும்பு, வெள்ளி

வெளிநாட்டவர்கள் இங்கு நிலம் வாங்குவது அதிகரித்து வருவதால் இதை தடைசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென காணி விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

மற்றைய நாடுகளில் இவ்விதம் அங்நிய நாட்டவர்கள் காணிகளை வாங்காத வகையில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இலங்கையில் அங்நிய நாட்டவர் காணிகளை வாங்காதவாறு தடை செய்வதற்கு இவ்வித சட்டமொன்றை இலங்கை அரசாங்கமும் இயற்றவேண்டும். இவ்வித சட்டம் இயற்றப்படுவதால் அங்நியர் இந்த நாட்டில் காணிகள் வாங்கி நிலச்சொந்தக்காரர்களாகாதவறு தடுக்கலாம் என மந்திரி திரு ஸி. பி. டி' சில்வா மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இலங்கையரல்லாதவர்ப்ள் இங்கு காணி வாங்குவதை தடை செய்யும் சட்டமொன்றை இயற்ற அரசாங்கம் ஆலோசனை செய்துள்ளது.

இந்த சட்டம் அமுலுக்கு வந்தால் தொழிற்சாலைகளையும் வேறு அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தக்கூடிய ஸ்தாபனங்களையும் நிறுவுதற்கு மட்டுமே அங்நியர் இங்கு காணி வாங்க அனுமதிக்கப்படுவர்.

## சதி விசாரணை நடைபெறும் இடம்

### தனியாக ஒருஇடம் ஒதுக்க நடவடிக்கை?

கொழும்பு, வெள்ளி

சதித் திட்டத்தில் கலந்துகொண்டதாகச் சந்தேகிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் கொழும்பு கோட்டடியில் விசாரணை செய்யப்படமாட்டாரகளெனத் தெரிகிறது.

கோர்ட்டில் போதிய இடவசதியில்லாமையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசாரணையை ஒரு விசாலமான கட்டடத்தில் நடத்துவதற்கு அட்டர்னி ஜெனரலின் இலாகா ஏற்பாடு செய்துள்ளதென நீதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில் இந்த முடிவு இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லையென்றும் வேறு இடத்தில் விசாரணை நடத்துவதாக இருந்தால் கடற்படைத் தலைமைக் காரியாலயத்தில் அது நடைபெறலாமென்றும் அவர் கூறினர்.

## பாடசாலைகளின் பெயர்மாற்றத்தில் அரசியல் தலையீட்டுக்கு ஆட்சேபம்

ஹேவாகெட்ட, வெள்ளி

"அரசியல் வாதிகளின் விருப்பத்துக்கிணங்க, மத்திய பாடசாலைகளின் பெயர்கள் மாற்றப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். இது போன்ற நடவடிக்கைகளுக்கு எல்லா பழைய மாணவர் சங்கங்களும் எதிர்ப்புக் காட்ட வேண்டும்" என்று தலத்து ஓயா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் அகில இலங்கை பழைய மாணவர் சங்கத்தின் காரியதரிசி திரு. பேட்டி கலகிற்றியாவ பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது:-

"நுகாவெல மத்திய மகா வித்தியாலயத்தின் பெயர் மாற்றப்பட்டதற்கு, பழைய மாணவர் சங்கம் கண்டனம் தெரிவித்திருந்தது. பாடசாலைகளின் பெயர்கள் மாற்றப்பட்டால், அப்பாடசாலையின் பழைய மாணவர்கள், தற்சமயம் அப்பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை அடையாளம் கண்டுகொள்வது கடினம். இது பழைய மாணவர்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையை முறியடித்துவிடும்."

## இளைப்பாறிய அதிபர்களுக்கு சங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலுள்ள 3 பிரபல கல்லூரிகளில் அதிபர்களாகக் கடமையாற்றி வந்த திருவாளர்கள் எஸ். எச். பேரின்பநாயகம், வி. எம். ஆசைப்பிள்ளை, வண. டி. ரி. நைல்ஸ் ஆகியோர் சேவையிலிருந்தும் இளைப்பாறியதை முன்னிட்டு அதிபர்கள் சங்கம் யாழ்ப்பாண வாடிவீட்டில் அவர்களுக்கு இரவுநேர விருந்துபசாரமொன்றை நடத்தியது.

விருந்துபசாரத்தில் தமக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னைநாள் அதிபர் திரு. எஸ். எச். பேரின்பநாயகம் கூறியதாவது:

எதிர்காலக் கல்விபற்றித் தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. அதிபர்கள் சங்கம்பற்றியும் இவ்விதமே தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

கல்வி ஸ்தாபனங்களை நல்வழியில் நடாத்திச் செல்ல இன்று தகுதியும் திறமையும் வாய்ந்த நல்லவர்கள் தேவைப்படுகிறார்கள்.

வைபவத்துக்குத் தலைமை தாங்கிய யூனியன் கல்லூரி அதிபர் திரு. பி. துரைரத்தினம் மூன்று முன்னைநாள் கல்லூரி அதிபர்களின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

யாழ்ப்பாண கல்லூரி திரு. கே. ஏ. செல்லையா, திரு. ஸி. சுப்பிரமணியம் ஆகியோரும் மேற்படி அதிபர்களின் தொண்டு ஆற்றல் திறமைபற்றிப் பேசினர்.

அதிபர்கள் தமக்குத் தெரிவிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்கள். திரு. டி. டி. ஜெயரத்தினம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## அஸ்ஸாம் சபாநாயகர்

சில்லாஸ், மார்ச், 23

அஸ்ஸாம்சட்டசபைசபாநாயகராகதிரு.சௌத்ரி இன்றுதெரிவு செய்யப்பட்டார். சபாநாயகர் தேர்தலை மலைப்பிரதேச அங்கத்தவர்கள் 12 பேர் பகிஷ்கரித்தனர்.

---

## திரு. ஆறுமுகத்துக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் உற்சவ காலங்களில் கதாப்பிரசங்கம் செய்து வந்த ஆசிரியர் திரு. ஆறுமுகத்தைப் பாராட்டுமுகமாக நேற்று முதலியார் திரு. ஸி. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் கோவில் அதிபர் திரு. கந்தப்ப செட்டியார் திரு. ஆறுமுகத்துக்கு பொன்னடை போர்த்திக் கௌரவித்தார்.

முதலியார் திரு. ஸி. முத்துத்தம்பி பேசுகையில் திரு. ஆறுமுகம் தொடர்ந்து சைவத்தொண்டு செய்து வரவேண்டுமென்றும், அவரது சேவை சமயவளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவதாக இருக்குமென்றும் கூறினர்.

திரு. பொன் முத்துக்குமாரன், திரு. மயில்கனம் ஆகியோரும் திரு. ஆறுமுகத்தைப் பாராட்டிப் பேசினர்.

## மேயர் மன்னிப்பு கோரினர்

காலி, வெள்ளி

சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலை, சிங்களத்தில் வெளியிடாததற்குகாலி மாநகரசபை விசேஷக் கூட்டத்தில் மேயர் ஜனப் ஏ. ஆர். எம். தாசிம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

களுவெல்ல தொகுதி அங்கத்தவர் திரு. டி. ஏ. எஸ். பி. தஹநாயக்கா ஆங்கிலம் தெரியாத அங்கத்தவர்கள் சபையில் இருக்கும் சமயம் நிகழ்ச்சி நிரலை, ஆங்கிலத்தில் மட்டும் வெளியிடுவது நல்லதல்ல என்றும் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் அங்கத்தவர் ஒருவர் கூட்டத்தினின்றும் வெளியேறினர் என்றும் அதற்குக் காரணம் அவருக்கு ஆங்கிலம் தெரியாததே என்றும் கூறி ஆங்கிலத்தில் மட்டும் நிகழ்ச்சி நிரலை தயாரிப்பது சபையைப் பொறுத்தவரையில் வரவேற்கத்தக்கதல்ல எனக் குறிப்பிட்டதைத் தொடர்ந்தே மேயர் இவ்வாறு மன்னிப்புக் கோரினர்.

ஹபரடுவ, வெள்ளி

இங்கு உப்புக்கு பெரு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சில வியாபாரிகள் ஒரு றூத்தல் உப்பு 50 சதத்துக்கு விற்பனை செய்கின்றனர்.

## 4 கண்களுடன் கன்றுக்குட்டி!

யாழ்ப்பாணம், சனி

கொட்டடி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திரு. ஆர். பாலசுப்பிரமணியம் வீட்டில் வசிக்கும் திரு. ஆர். திருமேனி என்பவருக்குச் சொந்தமான பசு ஒன்று நேற்று மாலை 3 மணிக்கு ஓர் அதிசயமான கன்றை ஈன்றது. மனித உடலமைப்புடன் பிறந்திருக்கும் இக்கன்றுக்குட்டியின் நீண்ட முகத்தில் நான்கு கண்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் இரு கண்கள் இருக்கின்றன! உறுப்புக்கள் சிலதும், முதுகுப்புறமும் மனிதனின் சாயலை ஒத்திருக்கின்றது. இந்த அதிசயக் கன்றை ஏராளமான மக்கள் சென்று பார்வையிட்டுச் செல்கின்றனர்.

கன்று பிறந்த சில நிமிட நேரத்தில் இறந்ததாக திரு. திருமேனி தெரிவித்தார். வழக்கமாக கன்று ஒன்று பிறந்து இறந்துவிட்டால் தாம் அழுவதாகவும் இம்முறை அபூர்வ மேனியுடன் பிறந்த கன்று இறந்ததும் தமக்கு அழுகை வரவில்லையெனவும் திரு. திருமேனி சிரித்துக்கொண்டே தெரிவித்தார்.

# கைத் தொழிலபிவிருத்தியாளருக்கு புதிய சலுகை

## அரசாங்கம் வழங்க தீர்மானம்

கொழும்பு, வெள்ளி

நாட்டில் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவியாக விருக்கக்கூடிய பொருள்களை இறக்குமதி செய்பவர்களுக்கு அரசாங்கம் சில புதிய சலுகைகள் வழங்கத் தீர்மானித்துள்ளது. கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப்பொருள்களை இறக்குமதி செய்பவர்களுக்கு சங்க வரி குறைப்புகளாலும் ஏனைய வரி குறைப்புகளாலும் அரசாங்கம் உதவவிருக்கிறது.

கீழ்வரும் பொருள்களை இறக்குமதி செய்பவர்களுக்கு சங்க வரி குறைப்புச் சலுகை வழங்கப்படும்:

மூலப்பொருள்கள்.

2. கைத்தொழிலுக்கு வேண்டிய யந்திரங்கள்.

3. கைத்தொழில் உபகரணங்கள் ஆகியவை.

அபிவிருத்தி டைரக்டரின் சாட்சிப் பத்திரம் பெற்றுக் கொண்டவர்களுக்குச் சலுகை வழங்கப்படும். தனிப்பட்டவர்கள் இறற்குமதி செய்யும் பொருள்கள் கைத்தொழில் அபிவிருத்திக்கு உதவியாகவிருக்கும் என்று கண்டபின், டைரக்டர், அவர்களுக்கு சலுகை பெறும் சாட்சிப் பத்திரங்களை வழங்குவார்.

# ஜனநாயக நாட்டில் மாற்றங்கள் அவசியம்

## உள்நாட்டு மந்திரி கருத்து

அநுராதபுரம், வியாழன்

"துரிதமாக முன்னேற்றமடைந்து வரும் உலகில் மாற்றங்கள் ஏற்படவேண்டுமென்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில் பெரும்பான்மை மக்கள் விரும்பும் மாற்றங்களை நாடு ஏற்படுத்த வேண்டியது அவசியம்" என்று உள்நாட்டு கைத்தொழில் கலாசார விவகார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா அநுராதபுரம் சென். ஜோசப் கல்லூரி பழைய மாணவர் சங்க விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"மாற்றங்களை சிலர் விரும்பாமலிருக்கலாம் ஆனல் நாட்டின் நலனை முன்னிட்டு மாற்றங்கள் ஏற்படத்தான் வேண்டும்" என்று திரு. மைத்திரிபால சேனநாயக்கா கூறினர்.

சென். ஜோசப் கல்லூரி தனது கடமையை இன்னும் செய்து முடிக்கவில்லையென்றும் இது போன்ற படசாலைகள் தொடாந்திருந்து வர வேண்டுமென்பதே அரசாங்கத்தின் விருப்பமென்றும் மந்திரி மைத்திரிபால கூறினர்.

அரசாங்க ஊழியரின் அரசியல் கொள்கைகளெதுவாக இருந்தபோதிலும் அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல் நடத்துவதில் அரசாங்க ஊழியர்கள் அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று திரு. மைத்ரிபால சேனநாயக்கா கூறினர்.

சென். ஜோசப் கல்லூரி ரெக்டர் வண. பிதா. டி. ஏ. ஜே. மதுரநாயகம் பேசுகையில் கல்லூரியைச் சிறந்த முறையில் தொடர்ந்து நடத்துவதற்கு பழைய மாணவர்கள் யோசனைகள் தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

### மாணவர் வெற்றி

உடுப்பிட்டி, வெள்ளி

உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆசிரியருக்கும் அதே கல்லூரி மாணவருக்குமிடையில் நடந்த சிநேக பூர்வமான கரப்பந்தாட்டப் போட்டியில் மாணவர் முதலிரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றனர்.

முதலாவது ஆட்டத்தில் 14—12 புள்ளிகளால் வெற்றியீட்டினர். இரண்டாவது ஆட்டத்தில் இரு கோஷ்டிகளும் 14—14 புள்ளிகளுடன் சரிசமனகப் போராடி, இறுதியில் மாணவர் வெற்றியீட்டினர்.

திரு. எஸ். ஞானசோதி மத்தியட்சம் வகித்தார்.

### ஆசிரியர் இல்லை

#### பாடசாலை மூடப்பட்டது

அக்கரைப்பற்று, வியாழன்

டிசம்பர் மாதத்திலிருந்து வெலிக்கந்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மூடப்பட்டுள்ளது.

56 மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலையின் தலைமை ஆசிரியரும் ஆசிரியருமாகக் கடமையாற்றியவர் சென்ற டிசம்பர் மாதத்தில் இட மாற்றம் செய்யப்பட்டார். அவருக்குப்பதிலாக வேறு எவரும் நியமிக்கப்படாததால் தான் பாடசாலை மூடப்பட்டுள்ளது. பெற்ருேர் கல்வி இலாகாவுக்குப் புகார் செய்தும் இன்னும் பயன் கிடைக்கவில்லையென்று கூறப்படுகிறது.

### மாணவர் ஆட்சேபம்!

நாகொடை, வியாழன்

நாகொடை மகாவித்தியாலய உதவி அதிபரின் திடீர் மாற்றத்துக்கு வித்தியாலய மாணவரும், பழைய மாணவரும், பெற்ருரும் வித்தியாபதிக்கும் இப் பகுதி எம். பி. க்கும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாத்களுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

### மெஷின் மைண்டர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு கம்பனிக்கு அனுபவம் வாய்ந்த சிலிண்டர்-பிளாட்டின் மெஷின் மைண்டர்கள் தேவை. அச்சு இயந்திரம் பழுது பார்க்கும் அறிவு விசேஷ தகைமையாகக் கணிக்கப்பெறும். விபரங்கட்கு X 25, C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.

### தேவை

பலசரக்கு வியாபாரத்தில் பட்டடை அனுபவமும், பிற வியாபாரிகளிடம் சாமான் தரம் பார்த்துக் கொள்முதல் செய்யவும், சாமான் விற்றுப்பில் போடவும் நன்கு பழகிய ஆட்கள் தேவை. நேரில நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விநோதன்ஸ் அன் கம்பனி, 108, ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்.

# உங்கள் தினப்பலன்

-சோதிட ஆசான் செ. தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனி மாதம் 11-ந் தேதி சனிக்கிழமை (24-3-62) மாலை 6-15 வரை திருதியை. பின் சதுர்த்தி. இரவு 1-28 வரை சுவாதி. பின் விசாகம். அமிர்தசித்தயோகம். வித்தை கலாச்சார செயல்களுக்கு விசேடமான தினமாகும். மாலையில் சிறிது கஷ்ட நிலைகள் காணப்படுவதால் தெய்வ வழிபாட்டில் அமைதியாக காலம் கழிக்குக.

### இன்று பிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு பொதுவாக நற்பலன்கள் கூடுதலாகவும் தீயபலன்கள் குறைவாகவும் நடக்கும். தேக நலத்தைக் கவனித்து முற்பகுதியில் நடத்தல் அவசியம். பொருள் கொடுக்கல் வாங்கல் கஷ்டங்களும் முற்பகுதியில் உண்டு தொழில் வெற்றி, பணவரவு, சொத்துச் சேர்க்கை, உத்தியோக நன்மைகள், கல்வியில் ஊக்கம், பெண்களுக்கு சுபகருமப் பேறுகள் நடத்தல் ஆகியன காணப்படுகின்றன.

### நட்சத்திரப் பலன்

அச்சுவினி: வாக்குச் சிறப்பு, பெரியோர் தொடர்பு.

பரணி: மனக் குழப்பம், தொழிற் கேடு

கார்த்திகை: வித்தைச் சிறப்பு, சுப செய்தி,

ரோகிணி: காரியத் தடை, ஏமாற்றம்.

மிருகசீரிடம்: குடும்ப சுகம், பண வரவு.

திருவாதிரை: வீண் பகைகள், அலைச்சல்.

புனர்பூசம்: பணவரவு, தேக நலக்கேடு.

பூசம்: சுபசெய்தி, தனலாபம்.

ஆயிலியம்: அற்பர் நேசம், விரோத வளர்ச்சி.

மகம்: பொருள் சேர்க்கை, புகழ்

பூரம்: விரோத வளர்ச்சி, சகோதரர் கஷ்டம்.

உத்தரம்: தொழிற் சித்தி, சுபசெய்தி.

அத்தம்: கடும் உழைப்பு, நீசர் தொடர்பு.

சித்திரை: மதிப் புணர்ச்சி, தொழில் வெற்றி.

சுவாதி: உண்டி வெறுப்பு, வெப்ப நோய்.

விசாகம்: வாக்கு வன்மை, தேகநலக் கேடு.

அனுஷம்: பெண்களால் நலம், நற்பயணம்.

கேட்டை: தொழிற் தடை, கடும் யோசனை.

மூலம்: வாக்கு வெற்றி, சிந்தனை.

பூராடம்: தொழிற் கஷ்டம், வருவாய்த் தடை.

உத்தராடம்: சுபசெய்தி, குடும்ப சுகம்.

திருவோணம்: நீசர்தொடர்பு கடன் தொல்லை.

அவிட்டம்: தொழிற் சிறப்பு, சுகம்.

சதயம்: நண்பர் தொல்லை, நலக்கேடு.

பூரட்டாதி: பண முடை, சம சுகம்.

உத்தரட்டாதி: கடன் வரவு, கஷ்ட நிவர்த்தி.

ரேவதி: காரியக் கேடு, நண்பரால் செலவு.

### யானை தாக்கியது

ஹிங்குருக்கொடை, புதன்

வெலிகந்தை — பொலன்னறுவை வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வி. ஜினதாசா என்பவரை காட்டு யானை ஒன்று தாக்கியது. பலத்த காயங்களுடன் இவர் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

# ஐந்து வயதுக் குழந்தை கோர்ட்டில் சாட்சியம்

## சங்கிலி திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

விஜயரஞ்சனி என்னும் 5வயதுச் சிறுமிக்குச் சொந்தமான 300 ரூபாய் பெறுமதியான தங்கச் சங்கிலியை 1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி திருடியதாக ஆறுமுகம் என்பவரின் மனைவியான அழகம்மாமீது குற்றம்சாட்டி யாழ்ப்பாணம் பொலிசாரால் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. எம். ஜமீல் எதிரியை விடுதலை செய்தார்.

பிராசிக்கியூஷன் தரப்பில் இன்ஸ்பெக்டர் திரு. மார்சோ ஆஜரானர். எதிரியின் சார்பில் புரக்டர் திரு ஏ. அமிர்தலிங்கம் ஆஜரானர்.

குற்றச்சாட்டுப்பற்றிக் குழந்தைக்கு விளங்கிக்கொள்ள முடியுமா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுமுகமாகக் குழந்தையை மாஜிஸ்டிரேட் விசாரணை செய்தார்.

மாஜிஸ்டிரேட்:- உனக்கு என்ன வயது?

குழந்தை:- எனக்கு ஐந்து வயது.

மாஜிஸ்டிரேட்:- இங்கே எதற்காக வந்திருக்கிருய்?

குழந்தை:- நான் சாட்சியமளிக்கவந்திருக்கிறேன்.

மாஜிஸ்டிரேட்:- இப்பொழுது எங்கே நிற்கிருய்?

குழந்தை:- நீதிமன்றத்தில் நிற்கிறேன்.

மாஜிஸ்டிரேட்:- உனக்கு என்ன நடந்தது?

குழந்தை:- (எதிரியைச் சுட்டிக்காட்டி) எனது கழுத்திலிருந்த சங்கிலியைப் பறித்தெடுத்தார்.

மாஜிஸ்டிரேட்:- நீ ஒரு குழந்தை. உண்மை பேசவேண்டும். தெரியுமா?

குழந்தை விஜயரஞ்சனி மேலும் சாட்சியமளிக்கையில் தனது பாட்டியுடன் தான் நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்குச் சென்றது தனக்கு நினைவு இருக்கிறதென்றும் தமது கழுத்தில் தங்கச்சங்கிலி அணிந்திருந்ததாகவும் கோவிலிலிருந்து திரும்பியபொழுது பாட்டியிடம் தண்ணீர் கேட்டதாகவும், தண்ணீர் குடிக்கச் சென்ற சமயம் எதிரி தனது சங்கிலியைப் பறித்ததாகவும் கூறினர். "நான சத்தமிட்டேன். ஆட்கள் கூடினர்கள். எதிரியைச் சுட்டிக்காட்டினேன். பொலிஸார் எதிரியைக் கைதுசெய்தனர்" என்று விஜயரஞ்சனி கூறினர்.

குறுக்குவிசாரணையின்போது பின்புறமிருந்து சங்கிலி பறித்தெடுக்கப்பட்டதாக விஜயரஞ்சனி சொன்னர்.

நாகலிங்கத்தின் மனைவி கனகம்மா சாட்சியமளித்தார்.

விசாரணையின் முடிவில் மாஜிஸ்டிரேட் எதிரியை விடுதலை செய்தார்.

### இந்தியாவுக்குசீனவின் புதிய குறிப்பு

புதுடில்லி, மார்ச் 23

இந்திய-திபேத் வர்த்தக ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று கோரி சீன அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்கு புதிய குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளது என்று பிரமர் நேரு இன்று லோகசபையில் தெரிவித்தார்.

வர்த்தக ஒப்பந்தமும் சீன இந்திய எல்லைத்தகராறும் வெவ்வேறு பிரச்சனைகளென்றும் ஒன்றுடன் ஒன்றை சம்பந்தப்படுத்தாமல் வர்த்தக ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளலாமென்றும் சீன தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு பிரச்சனைகளையும் ஒன்ருகவே இந்திய அரசாங்கம் கருதுகிறதென்றும் சீனவின் புதிய குறிப்பை அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறதென்றும் பிரதமர் நேரு தெரிவித்தார்.

### யு தாண்ட் பாராட்டு

நியுயோர்க், மார்ச் 23

வானவெளி ஆராச்சியில் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒத்துழைப்பதற்கு ஐ. நா. தலைமைக் காரியதரிசி யு தாண்ட் பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளார்.

வானவெளியைச் சமாதான நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதுபற்றி ஆராயும் ஐ. நா உபகமிட்டிக்கு அனுப்பியுள்ள ஒரு செய்தியில் இருவல்லரசுகளும் காட்டியுள்ள நல்லெண்ணத்தை எல்லா நாடுகளும் வரவேற்க வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.


மிகத் திறமையான

**பவர்ஸ் உரங்கள்**

கிரிமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும் லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

**ஏ. பவர் அன் கொம்பனி லிமிட்டெட்,**

த. பெ. 11, கொழும்பு.

# அணு ஆயுத சோதனைத்தடை பேச்சில் முட்டுக்கட்டை

ஜெனிவா, மார்ச் 23

படைகுறைப்பு மகாநாட்டின் உபகமிட்டியொன்றில் அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்தம்பற்றி அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகியநாடுகளுக்கிடையில் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தையில் நேற்று முட்டுக்கட்டை ஏற்பட்டது.

சோதனை நடைபெற்றதா இல்லையா என்பதை சுந்தந்த இடத்துக்குச்சென்று பார்வையிடவேண்டுமென்ற அமெரிக்க யோசனைதான் முட்டுக்கட்டை யேற்படக் காரணமெனக்கூறப்படுகிறது.

அணு ஆயுத சோதனைத் தடை ஒப்பந்த பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளதுபற்றி படைகுறைப்பு மகாநாட்டுக்கு உபகமிட்டி இன்று அறிக்கை சமர்ப்பிக்கும் எனத் தெரிகிறது.

# அல்ஜீரிய வேலைநிறுத்தம் இன்று முடிவடையும்

## நேற்று ஆறுபேர் பலி

அல்ஜியர்ஸ், மார்ச் 22

அல்ஜீரிய தொழிற் ங்கத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக அல்ஜீரிய ஐரோப்பிய தீவிரவாதிகளின் இரகசிய ஸ்தாபனம் ஒழுங்குசெய்துள்ள பொதுவேலைநிறுத்தம் காரணமாக தண்ணீர்விநியோகம், போக்குவரத்து, மின்சார விநியோகம் ஆகிய சேவைகள் சீர்குலைந்துள்ளன.

தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் விடுதலைசெய்யப்பட்டுவிட்டதால் இன்று வேலைநிறுத்தம் கைவிடப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

அல்ஜியர்ஸில் இரகசியஸ்தாபனத்தினர் நேற்று நடாத்திய பலாத்கார சம்பவங்களில் ஆறு அல்ஜீரியர்கள் மாண்டனர். மற்றும் ஐந்துபேர் காயமடைந்தனர்.

வெடிகுண்டு ஒன்று வீசப்பட்டதில் பெண்களும் குழந்தைகளும் உட்பட 22 பேர் காயமடைந்தனர்.

# "சினிமா ஸ்டுடியோக்களை தேசியமயமாக்கவேண்டும்"

## தி. மு. க. தீர்மானம் கொண்டுவரும்

சென்னை, மார்ச் 23

தமிழ்நாட்டில் பஸ் போக்குக்குவரத்து, சினிமா ஸ்டுடியோக்கள், தியேட்டர்கள், நெசவுத்தொழில் ஆகியவற்றை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமெனக் கோரும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டசபையின் முதல் கூட்டத்தொடரிலேயே திராவிட முன்னேற்றக்கழகம் கொண்டுவரும் என்று தமிழ்நாடு சட்டசபை தி. மு. க. காரியதரிசி திரு கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

வங்கிகளைத் தேசியமயமாக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்துக்குச் சிபார்சுசெய்யும் தீர்மானமொன்றையும் தி. மு. க. கொண்டுவருமென அவர் கூறினர்.

## கேரளா விவசாய திருத்தமசோதா

திருவனந்தபுரம், மார்ச் 23

கேரளசட்டசபையில் விவசாய திருத்தமசோதாவும் ஸ்தலஸ்தாபன திருத்தமசோதாவும் நேற்று நிறைவேறின. விவசாய திருத்த மசோதாவுக்கு கம்யூனிஸ்ட் கட்சியினர் கொண்டுவந்த பல திருத்தங்கள் நிராகரிக்கப்பட்டன.

## அல்ஜீரிய தேசிய மந்திரிசபை

ரபாட், மார்ச் 23

அல்ஜீரிய தேசிய அரசாங்கத்தின் பன்னிரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட மந்திரிசபை நேற்று இங்கு முதல் தடவையாக முழுஅளவில் கூடி அல்ஜீரிய - பிரஞ்சு ஒப்பந்தத்தை ஆராய்ந்தது.

பிரெஞ்சு அரசாங்கத்தினல் சிறைவைக்கப்படிருந்து சமீபத்தில் விடுதலை செய்யப்பட்ட உதவிப் பிரதம மந்திரி முகம்மது பென்பெல்லாவும் மற்றும் நால்வரும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



"அப்பென்டிசைட்டிஸ்" என்னும் வயிற்றுவலிக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்ட சார்ள்ஸ் இளவரசர் ஆஸ்பத்திரியிலிருந்து அரண்மனைக்குச் செல்கையில் எடுத்தபடம்இது. பூரண குணமடைந்த இளவரசர் இப்பொழுது பாடசாலைக்குச் சென்றுவருகிறர்.

## தென்கொரிய அதிபர் ராஜினமா

சியோல், மார்ச் 23

தென் கொரிய ஜனதிபதி போ-சன்-யுன் தமது பதவியிலிருந்து இன்று ராஜினமாச் செய்தார். நாட்டின் தலைமைச் சபையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவர் ராஜினமாச் செய்துள்ளார்.

அடுத்த வருடம் மே மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் முன்னைய அரசியல்வாதிகள் போட்டியிடுவதைக் கட்டுப்படுத்தும் சட்டப் ஒன்றை தலைமைச் சபை நிறைவேற்றியது. இதற்கு ஜனதிபதி எதிர்ப்புத் தெரிவித்தது தான் கருத்து வேற்றுமை ஏற்படக் காரணம்.

## சுதந்திரா வெற்றி: திரு. நேரு கருத்து

புதுடில்லி, மார்ச் 22

"காங்கிரஸின் கொள்கைகளையும், வேலைத்திட்டங்களையும் ஆதரித்து மக்கள் நம்பிக்கை வோட் அளித்திருக்கிறுர்களென்பதே தேர்தல் முடிவுகளின் அர்த்தமாகும்" என்று காங்கிரஸ் அபேட்சகர்களின் தேர்தல் வெற்றிகளைப் பற்றி திரு. நேரு நிருபர்களிடம் வியாக்யானம் செய்தார்.

சுதந்திராக்கட்சியின்தேர்தல் வெற்றிகளைப் பற்றி திரு. நேரு பின்வருமாறு கூறினர்.

"அவர்களுடைய வெற்றி, கொள்கைகளுக்கோ, வேலைத் திட்டங்களுக்கோ வெற்றி என்று அர்த்தமில்லை. ஏதோ ஒருசில தனிப்பட்ட நபர்கள் வெற்றி பெற்றனர் என்றே அர்த்தமாகும்."

# இந்திய பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்

## வித்தியாதிபதி எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

இந்தியாவிலுள்ள அங்கீகாரம் பெருத பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் இலங்கை மாணவர் பிரவேசம்பெற முயல்வது பற்றி இலங்கை வித்தியாதிபதி எச்சரிக்கை தெரிவித்துள்ளார். இந்திய அரசாங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தி ஒன்றைத் தொடர்ந்து வித்தியாதிபதி மேற்படி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்திய அரசாங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது:-

"அங்கீகாரம்பெருத இந்திய பல்கலைக்கழகங்கள் படபங்கள் வழங்கிவருவதாக எமது அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக் கழகங்கள் வழங்கும் பட்டங்களை இந்திய அரசாங்கம் எந்தவிதத்திலும் ஏற்றுக் கொள்வதில்லை.

"அங்கீகாரம் பெருத பல்கலைக்கழகங்கள் பல 'சங்கங்கள் பதிவுச்சட்ட'த்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்துகொண்ட காரணத்தினல் மட்டும் அப் பல்கலைக் கழகங்கள் வழங்கும் பட்டங்கள் அரசாங்கத்தினல் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதற்கில்லை."

செய்தி அறிக்கையில், அங்கீகாரம்பெருத, ஆனல் பட்டம் வழங்கும் இந்திய பல்கலைக் கழகங்கள் சிலவற்றின் பெயர்கள் தரப்பட்டிருந்தன. வித்தியாதிபதி திரு. (எஸ். எப். டி' சில்வா, இந்தச்) செய்தி அறிக்கையை கல்வி இலாகா அதிகாரிகள் பலருக்கும் காண்பித்தார்.

செய்தி அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"'உயர்தரக் கல்வியின் மத்தியசபை' என ஒரு ஸ்தாபனம் தன்னைப் பதிவுசெய்து கொண்டுள்ளதென அரசாங்கத்துக்குத் தெரியவந்துள்ளது. இந்தக் கல்விஸ்தாபனம் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றதொன்றல்ல. ஆஜ்மார், டில்லியிலுள்ள கல்வி மத்திய சபைகள்போல இதுவும் இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றதல்ல."

## இஸ்ரேல் வெளிவிவகார மந்திரி

ஜெருசலம், மார்ச் 22

சிரியா இஸ்ரேல் எல்லையில் சமீபத்தில் ஏற்பட்ட கைகலப்பு சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐ. நா. யுத்த நிறுத்தக் கமிஷன் தலைவர் ஜெனரல் கார்றிவொன் ஹோர்னை வருமாறு இஸ்ரேலியா வெளிவிவகார மந்திரி திருமதி கொல்டாமேயர் அழைப்பு விடுத்தார்.

பிரிட்டிஷ், அமெரிக்கஸ்தானிகர்களையும் அழைத்து எல்லை நிலைமைபற்றி திருமதி மேயர் விவாதித்தார்.

## பாதுகாப்புசபை கூடுகிறது

நியுயோர்க் மார்ச் 22

இஸ்ரேல் சிரியா எல்லையில் சமீபத்தில் இஸ்ரேலியதுருப்புக்களுக்கும் சிரியாத் துருப்புக்களுக்கும் மிடையில் கைகலப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு தோன்றியுள்ள நெருக்கடி நிலைமை பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா. பாதுகாப்புச் சபை அடுத்தவாரம் கூடவிருக்கிறது.

# கூட்டுறவு முறையில் புனரமைப்பு

## உணவு மந்திரி யோசனை

மத்துகம, வியாழன்

"கூட்டுறவுமுறை இந்தநாட்டுக்குப் புதியதல்ல. ஆரம்ப காலத்திலிருந்தே இந்தநாட்டில் கூட்டுறவு முறை இருந்து வந்துள்ளது. கூட்டுறவுத்திட்டத்தினல் உற்பத்தியாளர்களும் பண்டங்களை வாங்குபவர்களும் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுறவுமுறையைப் புனரமைக்க வேண்டியதுதான் இன்றைய தேவை" என்று உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின இந்தப்பகுதி பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தின் புதிய கட்டடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். மந்திரி இலங்கரத்தின மேலும் கூறியதாவது:-

சமூகத்தில் அந்தஸ்து இல்லாமலும் வறுமையிலும் பெரும்பாலான மக்கள் இந்தநாட்டில் இன்றும் வாழ்கிறுர்கள். அரசாங்கம் சமூகசீர்திருத்தங்களுக்குப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதிலும் மக்கள் இன்னமும் தரகர்களையே நம்பியிருப்பதனல் அரசாங்கத்தின் முயற்சி இன்னும் பயன் தர முடியாமலுள்ளது.

தரகர்களின் பிடியிலிருந்து மக்கள் விடுவிக்கப்படுவதற்கு கூட்டுறவு இயக்கம் பலம்பெற வேண்டும்.

உலகம் முழுவதிலும் மக்கள் தங்கள் தேசியப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முயற்சிசெய்கின்றனர். அதேபோல் நமதுநாட்டின் நேசியப்பிரச்சினைகளைத் தீர்க்கவும் அரசாங்கத்துடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

திரு. இலங்கரத்தின மேலும் பேசுகையில் தனிப்பட்ட வர்த்தகர்கள் கருவாடு இறக்குமதி செய்வதைக்தடை செய்ததால் கருவாட்டுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளபோதிலும் பெருந்தொகையான பணம் இலங்கைக்கு வெளியில் செல்லாமல் இலங்கையிலேயே தங்கிவிட்டதென்று கூறினர்

## மே. ஜெர்மனியின் முதலாவது சப்மரீன்

கீல், மே. ஜெர்மனி, மார்ச் 22

உலக யுத்தத்துக்குப் பின் மேற்கு ஜெர்மன் கடற்படைக்காக முதலாவது சப்மரீன் இங்கு திங்களன்று இயங்க ஆரம்பித்தது.

யு-1 எனப்படும் 350 டன் எடையுள்ள இந்நீர் மூழ்கிக் கப்பலில் 20 சிப்பந்திகள் இருக்கின்றனர். பால்டிக் கடற்பகுதியிலும் கடலோரப் பகுதியிலும் இக்கப்பல் இயங்கி வரும்.

இம்மாதிரி மேலும் 11 கப்பல்களுக்கு மேற்கு ஜெர்மன் ஆர்டர் கொடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணம் வெள்ளி

கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலயத்திற்கு ஊஞ்சல் போன்ற விளையாட்டு உபகரணங்கள் கொடுத்து உதவுமாறு யாழ்ப்பாண மாநகரசபையை இந்நிலையம் கேட்டுள்ளது.

# 'வேலைகள் அநேகம் உண்டு; மக்களிடம் திறமையில்லை'

## உதவி மந்திரி பேச்சு

மகோ, வெள்ளி

"நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதாகச் சிலர் கூறுகிறுர்கள். ஆனல் நாட்டில் போதிய அளவு வேலைகள் இருக்கின்றன. அவற்றைச் செய்யத்தான் திறமைமிக்கவர்கள் இங்கு இல்லை".

இவ்வாறு கல்வி அமைச்சரின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. வி. டி. ஜீ. கருணரத்ன கல்கமுவா மகாவித்தியாலயத்தில் இரு புதிய கட்டிடங்களைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர். தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:-

"இந்த நிலைமைக்கு ஆசிரியர்களோ, மாணவர்களோ காரணமல்ல. நாட்டில் இருந்து வந்த கல்விமுறையே இதற்குக் காரணம்."

பள்ளிக்கூடத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் அவரிடம் வழங்கிய மகஜர் ஒன்று பற்றிக் குறிப்பிடுகையில் குறைகள் இல்லாத பள்ளிக்கூடம் எதையும் தாம் காணவில்லையென்றும், தாம் விஜயம் செய்த பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஒரு சில குறைகளேனும் இருக்க கண்டதாகவும் கூறினர்.

"இருநேர வகுப்புக்கள் பள்ளிக்கூடங்கள் பலவற்றில் நடாத்தப்படுகின்றன. இந்த முறை அவ்வளவு உசிதமில்லாத போதும், வேறுவகையில்லாத காரணத்தால் இந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. இலங்கையில் மட்டுமன்றி பெரிய சோஷலிஸ நாடாகிய ரஷ்யாவில் கூட இந்த முறை கையாளப்படுகிறது" என்று அவர் மேலும் கூறினர்.

வருடாந்தம் கல்வியில் மூன்றரைக் கோடி ரூபாய் செலவாகிறதென்றும், ஆனல் இதனல் அடையவேண்டிய முழு நன்மையையும் நாம் அடைவதில்லையென்றும் திரு. கருணரத்ன கூறினர்.

பொன் வாக்கு

'சொல்லியபடி செய்வது கடினமல்ல. மிக எளிது. ஆனால் சொல்லும்போது யோசித்துச் சொல்லப் பழகிக் கொள்.'

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 11 உ (24-3-62)

## வியாபாரிமார் கருணை!

பிரதான உணவுப் பொருள்களின் விலையை அரசாங்கம் கட்டுப்படுத்தியிருப்பதுடன் அப்பொருள்களின் விலைப் பட்டியலைக் கடைகளில் பகிரங்கமாகத் தொங்கவிடவேண்டுமெனவும் சட்டம் இயற்றியிருக்கின்றது. பொதுமக்களின் நலத்தைக் கருதி மேற்கொள்ளப்பட்ட இந்த ஒழுங்கு முறையை இந்நாட்டிலுள்ள வியாபாரிகளிற் பலர் கடைப்பிடியாதிருப்பது வெட்கமும் துக்கமுமான காரியமாகும்.

கட்டுப்பாடு விலைக்கு மேலாகச் சில பொருள்களை விற்பதால் கொள்ளை லாபம் கிடைப்பது உண்மையேயானாலும், இதனை மனிதாபிமானமற்ற செயல் என்றே அனைவரும் கொள்வர். அதிக லாபத்தைக் கருதி தமது மனச்சாட்சிக்கு எதிராக நடந்துகொள்ளும் கருணையற்ற வியாபாரிகள் சமுகத்துக்கே தீங்கு விளைக்கின்றனர். மனச்சாட்சியென ஒன்று இருந்தால் அதனையும் இவர்கள் விற்றுவிடுகின்றனர் என்றே கூறவேண்டும்.

முன்னர் எல்லாம் விலைக் கட்டுப்பாட்டை மீறுபவர்களை நீதிமன்றங்கள் விசாரணை செய்து தகுந்த தண்டனை விதித்துவந்தன. ஐந்து சதம் இலாபம் பெறுவதற்காக ஒரு சிறிய பொருளை விற்பவருக்கு நீதிமன்றத்தில் 500 ரூபாய் தண்டனை கிடைப்பதுமுண்டு. இவ்வாறு பேராசையின் விளைவாக அதிக பணத்தை இழக்கும் வியாபாரிகள் சிலர் தர்ம சிந்தையுடன் நடக்க முடியாவிட்டாலும் சட்டதிட்டத்துக்குக் கட்டுப்பட்டு நடந்துகொண்டால் எவ்வளவோ சிரமத்தைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இப்போது கொள்ளை லாபம் அடிப்பவர்களை அரசாங்க அதிபர்கள் விசாரணை செய்து தண்டனை விதிக்கின்றனர். உணவுப் பொருள்களை அதிக விலைக்கு விற்பதும், அதற்காக விசாரணை செய்யப்பெற்றுத் தண்டனை பெறுவதும் மனித இனத்துக்கே இழிவுதருவதாகும்.

அரசியல் துறையில் மக்கள் இன்னல்களை அனுபவித்தாலும் அதிலிருந்துகூட என்றோ ஒரு நாள் மீட்சி கிடைக்கின்றது. ஆனல் பொருளாதாரத் துறையில் வியாபாரிகளிற் சிலர் அனுஷ்டித்துவரும் தவறான முறைகள் சட்டத்துக்கே சவாலாக அமைந்துவிடுகின்றன. குறுக்கு வழியிற் பணம் சேகரிக்கவேண்டுமென்ற இத்துராசை இரண்டாவது யுத்தத்துக்குப் பின்னர் பல்வேறு வகையில் செயற்பட்டுவருகின்றது. சமுக வாழ்வில் ஒழுக்க நெறி உயர்வடையும்போதுதான் இத்தகைய இழிசெயல்கள் ஒழியுமெனலாம்.

## சுகாதார இலாகா ஆட்சேபம்

இளம்பிள்ளை வாத நோய் கொழும்புப் பகுதியில் பரவி வருவதால் அங்கு 250 பள்ளிக்கூடங்கள் வரை மூடப்பட்டுள்ளன. இப்பள்ளிக்கூடங்களில் மொத்தம் ஒரு இலட்சம் குழந்தைகள் வரை கல்வி பயின்று வருகின்றனர். கல்வி மந்திரி விடுத்த இந்த உத்தரவுக்கு சுகாதார இலாகா தெரிவித்துள்ள ஆட்சேபத்தில் இந்த உத்தரவு மக்களிடையே பீதியை உண்டாக்கியிருக்கின்றதென்பதைச் சுட்டிக் காட்டியிருக்கின்றது.

பள்ளிக்கூடங்களை மூட வேண்டியதில்லையென்பதற்கு சுகாதார இலாகா தெரிவித்துள்ள மற்றுமொரு காரணம் மிக முக்கியமான தொன்றாக எமக்குத் தோன்றுகின்றது. குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் இருக்கும்போது அவர்கள் ஒரு கட்டுப்பாட்டுக்குள் அமைந்து கொள்வார்களெனவும், வீடுகளுக்குச் செல்வதால் பிற இடங்களுக்கும் கிருமிகளைக் கொண்டு சென்று நோயைப் பரப்புவது ஏதுவாகுமென்றும் அவர்கள் தெரிவித்திருப்பது முற்றிலும் சரியே. தவிர பள்ளிக்கூடங்கள் மூலம் நோயைத் தடுப்பதற்கான வழிகளைக் கையாள்வது சுலபமென்பதையும் எவரும் ஆட்சேபிக்கமாட்டார்கள்.

பள்ளிக்கூடங்களை மூடிவிடும்படி கல்விமந்திரி உத்தரவு பிறப்பிக்க முன்னர் அதனால் ஏற்படக் கூடிய சாதக பாதகங்களைச் சுகாதார இலாகாவினருடனும், கொழும்பு மாநகரசபை சுகாதாரப் பகுதி அதிகாரியுடனும் கல்விமந்திரி கலந்தாலோசித்திருந்தால் எவ்வளவோ நன்மையாக இருந்திருக்கும்.

## இன்று காரைக்கால் அம்மையார் திருநாள்

# சமயப்பணியில் பெண்கள் பங்கு

### காரைக்கால் அம்மையார் காட்டியவழி

**இன்று காரைக்காலம்மையார் குருபூசைத் தினம். மங்கையர் திலகமாகிய புனிதவதியார் இறைவனடத்து இடையருத அன்பும் பக்தியும்பூண்டொழுகினர். இறைவனால் 'அம்மா' என அழைக்கப் பெற்றுகாரைக் காலம்மையார் என்ற பெருமைக்கும் உரிமையானர்.**

பெண்களாய்ப் பிறப்பதற்கே மாதவஞ் செய்திட வேண்டுமம்மா என்று கூறினர் கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை. தலைசிறந்த கவிஞர்கள் அனைவரும் பெண்ணின் பெருமையைப் பேசாமற்போகவில்லை. அன்னை தயையால் தான் உலகுவாழ்கிறது என்று கூறின் அதுமிகையாகாது.

### பெண்கள் சக்தி

பெண்கள் இவ்வாறு பெருமையுடன் திகழக் காரணம் யாது? பெண் கல்விக்கு செல்வத்திற்கு, வீரத்திற்கு உறைவிடமாக விளங்குகின்ருள். இந்த அரிய கருத்தைப் பண்டைத்தமிழ் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர். வீரம், கல்வி, செல்வம், பக்தி, கற்பு என்பனவற்றிற்கு நிலைக்களனகி

வாழ்ந்த பெருமை மங்கையர்க்கே உரியது. வீரமகளிர் வரலாறுகள் பல நாமறிந்ததே. பக்தி நெறிநின்று ஒழுகிய தெய்வ மகளிர் வரலாறும் நமது பெண்ணுலகில் ஏராளமாக உண்டு. பெண்கள் பக்தியின் திறத்திற்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது காரைக்கால் அம்மையார் எனும் புனிதவதியாரின் சரித்திரம். தெய்வ நம்பிக்கையானது நாகரிக வளர்ச்சியினால் அருகிவருமிக்காலத்தில் இத்தகைய வரலாறுகள் நமக்கு உண்மையை உயர்த்தக்கூடியன. தெய்வப் பற்றினை வளர்த்து நமதுவாழ்க்கையைநடாத்தவும் இது உதவும்.

காரைக்கால் அம்மையார் சரித்திரம் அனைவரும் அறிந்ததொன்றே. இச் சரித்திரத்தில் வரும் சிலசம்பவங்கள் நம்பத்தகாதன என்று இக்காலத்தில் ஒதுக்கப்படுவதில் ஆச்சரியமில்லை. எனினும் நாம் இத்தகையசரித்திரங்கள்வாயிலாகப் பல உண்மைகளை உணரப்பெறுகின்றோம் என்பதனை மறுப்பதற்கில்லை.

வான்வெளி ஆராய்ச்சி சாதாரணமானதாகக் கருதப்படும் காலம் வெகு சமீபத்தில் உள்ளது. இப்போது நிகழ்த்தப் பெறுகின்ற சாதனைகள் கூட ஒரு காலத்தில் கட்டுக்கதை என எள்ளி நகையாடப்படலாம். இதனைப் போலவே தான் அன்றைய சில சம்பவங்கள் இக் காலத்தவர்களுக்குக் கட்டுக் கதைகளாகத் தென்படலாம். புராணங்கள் ஓர் உண்மையை உலகுக்கு குணர்த்த எழுந்தவையென்ற எண்ணம் பரவினல் இத்தகைய கருத்துக்கள் ஒழிந்துவிடலாம்.

### பக்தி வாழ்க்கை

காரைக்காலம்மையாரின் தியாக வாழ்க்கை உண்மையான பக்தியை உணர்த்த எழுந்தது. தெய்வத்தின் மீது அசைக்க முடியாத பரிபூரணமான பக்தி கொண்டிருந்தமை பெண்ணுலகப் பெருமைக்கு ஏதுவாகின்றது. காரைக்காலம்மையார் இறைவனுடைய திருவடிகளிலே அன்பு மிகுதியும் பெருக, இல்லறத்திற்கு வேண்டுவவற்றை வழுவாது செய்வாராயினர்.

புனிதவதியாரின் வாழ்க்கையைப் பிரதிபலித்துக் காட்டும் சம்பவம் ஒன்று வருமாறு.

அம்மையார் தமக்குத்திருவருள் உதவிய திறத்தை வெளிப்படுத்துதல் தகுதியன்று என்று நினைக்கின்ருர். இதனல் முதலில் நிகழ்ந்த சம்பவத்தைக் கூறத்தயக்கமடைந்தார். கணவனுக்கு உண்மையை மறைத்துக் கூறுதல் மாண்புடையதாகாது என்ற எண்ணமும் அம்மையார் மனத்திலே உதயமாகின்றது. முதலில் உண்மையைக் கணவனிடம் சொல்லுகின்ருர். மனைவியின் பக்தித்திறத்தை அறிந்த கணவன் மனைவியைத் தெய்வமாக வழிபடுகிருன். தர்ம சங்கடமானதோர் நிலையை அம்மையார் சமாளிக்கின்ருர். கணவனுக்கு அர்ப்பணித்த உடலை வைத்திருக்க அவர் விரும்பவில்லை. கணவன் பொருட்டுத் தாங்கிய அழகு தங்கிய தசைப் பொதியை நீக்கி இறைவனைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேயுருவைப் பெற்ருர். பேயுருவைப் பெற்ற அம்மை சில சிறப்பான தலங்களுக்குக் காலினல் நடந்து செல்வது தகாது என்றமையினல் தலையினல் நடந்து சென்று தனது தீவிர

(5-ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

## 'கிரிக்கட்டும் கிளித்தட்டும்'

பதுமன்

பிரிட்டிஷ்காரர் கிரிக்கட் விளையாட்டைத் தங்கள் நாட்டில் ஆரம்பித்தபோது அவர்களிடம் பாடங்கேட்டவர்களே கிரிக்கட் விளையாட்டில் என்ருே ஒரு நாள் விஞ்சிவிடுவார்கள் எனக் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். பிரிட்டனின் தேசிய விளையாட்டான கிரிக்கட் இன்று காமன் வெல்த் நாடுகளின் பொதுச் சொத்தாகிவிட்டதுமன்றி, பிரிட்டனே பார்த்து வியக்குமளவுக்கு காமன் வெல்த் நாடுகள் இவ்விளையாட்டில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில்கூட கிளித்தட்டும், கிட்டி அடித்தலும் இன்று கனவாய்ப் பழங்கதையாகிக்கொண்டுவருகின்றன!

இப்படி எல்லாம் பழைய காலத்துக்கு வாசகர்களை இழுத்துக்கொண்டு செல்வது பதுமனின் நோக்கமல்ல. வடபகுதியிலுள்ள கல்லூரிகளிடையே இப்போது நடைபெற்றுவரும் கிரிக்கட் போட்டிதான் இதனை எழுசச் செய்துவிட்டது.

மணித்தியாலக்கணக்காகவும் நாள் கணக்காகவும் விளையாடப்பட்டுவரும் இந்தக் கிரிக்கட்டைப் பார்த்து பேர்னுட்ஷோ போன்ற மாமனிதர்கள் எள்ளி நகையாடியிருக்கின்றனர்.

சொற்ப தொகையான மடையர்கூடி அங்கும் இங்கும் ஓடித்திரிவதை ஆயிரக்கணக்கான மடையர்கள் கூடியிருந்து பார்க்கும் விளையாட்டென ஒரு சமயம் அவர் கூறியிருந்தார். இப்படி கிரிக்கட் பிரியர்கள் எல்லோரையும் ஒரேயடியில் மடையர்களாக்கிவிட்டுக் கெக்கட்டமிட்டுச் சிரிக்கின்ருர் ஆங்கில மேதையான பேர்னுட்ஷோ.

### அருஞ் செல்வம்

அமெரிக்கர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு கிரிட்கட் என்ருல் ஒரே சிரிப்புத்தான். அவர்களால் இந்த விளையாட்டின் அருமை பெருமைகளை எப்படி அறியமுடியும்? அமெரிக்காவுக்கும் கிரிக்கட்டுக்கும் வெகுதூரம் என்று சொல்லுங்களேன்.

பிரிட்டிஷாரைப் பொறுத்தவரை கிரிக்கட் அவர்களின் பாரம்பரியச் சொத்து. முன்னேர் வழிவந்த அருஞ் செல்வம் அது. அவர்களின் இரத்தத்தோடு இரத்தமாக அது சேர்ந்து பொது வாழ்க்கையிலே அவர்களைக் கண்ணியம் மிக்க மனிதர்களாக்கிக்கொண்டிருக்கின்றது. பிரிட்டிஷ் மரபு வழி வளர்ந்துகொண்டிருக்கும் இந்தப் பண்பு இலங்கையிலும் வளம் பெறுமாயின் இந்த நாட்டில் பூசல் பிணக்குகளுக்கு இடமே இருக்கமாட்டாதல்லவா? வாழ்க கிரிக்கட்!

### 'தென்பு அளிக்கும் தேநீர்'

பிரிட்டனையும் கிரிக்கட்டையும் பற்றி எழுதும் போது பிரிட்டிஷார் விரும்பி அருந்தும் தேநீரைப் பற்றி எழுதாமல் இருக்கமுடியவில்லை. சோர்வை அகற்றும் சக்தி தேநீருக்கும் காப்பிக்கும் இருப்பது உண்மைதானயினும் இப்பழக்கம் ஈற்றில் உடலுக்குத் தீங்கை விளைக்குமெனப் பலர் கூறுவதுண்டு. ஆனல் இன்றைய விஞ்ஞானிகள் தேநீர் வலிமைதரும் பானமெனவும், நீண்ட காலம் வாழவைக்கும் சக்தி அதற்கு உண்டெனவும் கண்டுள்ளனர்.

பீகிங்கிலுள்ள சீன விஞ்ஞானக்கழகம் அண்மையில் ஒருபரிசோதனைநடாத்தியது. 100க்கு மேல் 120 க்கு உட்பட்ட 55 கிழவர்களை அது விசாரணை செய்து அவர்கள் நீண்ட காலம் வாழ்ந்து வருவதின் இரகசியத்தை வெளியிட்டது.

அதாவது, அவர்களில் எவருமே புகைபிடிப்பதில்லையெனவும், பாலும் தேநீரும் தவிர வேறு பானங்களை அவர்கள் அருந்துவதில்லையெனவும் அறிந்துகொள்ள முடிந்தது.

### 'இலங்கரத்ன ஸ்பெஷல்'

இலங்கையைத் தேயிலைத் தோட்டமென பிரிட்டிஷார் எண்ணியிந்த காலமும் ஒன்று இருந்தது. தேயிலை மணங் கமழும் ஸ்ரீலங்காவில் இப்போது கருவாட்டுத் தட்டுப்பாடு ஏற்பட்டு எத்தனையோ பெரிய புள்ளிகளையெல்லாம் ஆட்டி வைக்கின்றது. காய்ந்து வரண்ட கருவாட்டுக்குத் தான் எவ்வளவு சக்தி. இப்போது 'இலங்கரத்ன ஸ்பெஷல்' எனவும் ஒரு கருவாடு அழைக்கப்படுகின்றது. மந்திரியார் இந்தக் கருவாட்டை உட்கொண்டு தான் இப்படிப் பொங்கிப் பூரிப்பாக இருக்கின்ருரோ, என்னவோ!

### கஞ்சிக்கு உப்பில்லை

பாலுக்குச் சீனி இல்லை என்பது சிலரின் கவலை. கஞ்சிக்கு உப்பில்லை என்று கண்ணீர் விடுபவர்களும் உளர். இருசாராரும் ஒன்றுகூடி 'மருந்துக்கும் உப்பில்லை' யென ஒப்பாரி வைக்கும் காலம் இது. ஆனல் இப்போது சில நாட்களாக உப்பு அதிகமாகக் கிடைக்கின்றது. உள்நாட்டுப் பத்திரிகைகளில் இந்தப் பண்டம் இந் நாட்களில் அதிகமாகக் காணப்படுகின்றது. ஆம், 'உப்பு உப்பு' என்று பத்திரிகைகள் அளந்து கொட்டுவதையே பதுமனர் இங்கு குறிப்பிடுகின்ருர்.

## வானவெளியில் புது துணைக்கோள்

### சுவையான தகவல்கள்

மாஸ்கோ, மார்ச் 23

சோவியத் யூனியனிலிருந்து மார்ச் 16-ல் மற்றொரு செயற்கைத் துணைக்கோள் அண்ட வெளிக்குச் செலுத்தப்பட்டிருக்கும்செய்தி ஏற்கனவே வெளியாகியுள்ளது. அதைப்பற்றி மேலும் சில சுவையான தகவல்கள் இப்போது கிடைத்துள்ளன.

பூர்வாங்கக் கணக்குகளின்படி இந்த ஸ்புட்னிக் பூமியிலிருந்து 217 கிலோமீட்டர் குறைந்தபட்ச தொலைவும், 980 கிலோமீட்டர் அதிகபட்சத் தொலைவுமுள்ள வட்டப்பாதையில் விடப்பட்டிருக்கிறது. ஸ்புட்னிக்கினது சுழற்சியின் ஆவர்த்தன நேரம் 96.35 நிமிடங்கள். அதன் சுழற் பாதையின் மட்டம் பூமத்திய ரேகை மட்டத்திலிருந்து 49 டிகிரி சாய்ந்துள்ளது.

இந்த ஸ்புட்னிக் விஞ்ஞானக் கருவிகளைத் தாங்கிச்செல்கிறது. வானொலி தொலைக்குறி அமைப்பும் 20.003,90,018மெகாசைக்கிள் அலைவுகளில் இயங்கும் ஒரு டிரான்ஸ் மீட்டரும் இதில் இருக்கின்றன.

ஸ்புட்னிக்கின் பாதையைக் கணிப்பதற்கும், அதற்கு உத்தரவுகள் அனுப்பிவைப்பதற்கும், சோவியத் பிரதேசத்திலுள்ள தரை நிலையங்கள் அதிலிருந்து வரும் தொலைக்குறி அறிவிப்புகளைச் சேகரித்து அதன் சுழற்பாதையைக் கணித்துக் கொடுக்கும்.

வளி மண்டலத்தின் மேய மட்டங்களையும் புறவெளியையும் ஆராய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தில் மேலும் ஒரு நடவடிக்கையாக இந்தச் செயற்கைத் துணைக்கோள் செலுத்தப்பட்டிருக்கிறது. இந்த வேலைத் திட்டத்தின்படி சோவியத் யூனியனிலுள்ள பல்வேறு அண்டவெளி விமான நிலையங்களிலிருந்தும் 1962-ல் தொடர்ச்சியாக பல செயற்கைத் துணைக்கோள்கள் செலுத்தப்படும்.

இந்த ஸ்புட்னிக்கின் விஞ்ஞான வேலைத்திட்டத்தில் அடங்கியுள்ள ஆராய்ச்சி வேலையாவன: ரேடியோ அலைகள் பரவும் முறைப்பற்றி ஆராயும் பொருட்டு அயன மண்டலத்திலுள்ள முன் ஏற்றத் துகள்களின் அடர்த்தியை அறிதல் துகள் பெருக்குகளையும் குறைந்த ஆற்றலுள்ள துகள்களையும் ஆராய்தல்; நீடித்த அண்டவெளிப் பயணங்களின் போது ஏற்படக்கூடிய கதிர் வீச்சு அபாயத்தை மேலும் தெளி

5ம் பக்கம் பார்க்க

# கோவாவிலுள்ள போர்ச்.கைதிகள்

## இந்தியாவுக்கு புதிய குறிப்பு

புதுடில்லி, மார்ச் 23

கோவாவில் காவலில் வைக்கப்பட்டுள்ள போர்ச்சுக்கீஸிய சிப்பாய்களையும் சிவிலியன்களையும் திருப்பி அழைத்துக் கொள்வது சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துக்கு போர்ச்சுக்கல் அரசாங்கம் புதிய குறிப்பு ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக பிரதமர் நேரு இன்று லோகசபையில் தெரிவித்தார்.

புதிய குறிப்பில் புதிய அம்சம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை என்று திரு. நேரு கூறினர்.

பிரேசில் ஸ்தானிகர் மூலம் இப்புதிய குறிப்பு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இக்குறிப்பைத் தாம் இன்னும் சரியாகப் பார்வையிடவில்லையென்றும் திரு. நேரு கூறினர்.

மொஸாம்பிக்கிலும் அங்கோலாவிலும் காவலில் வைக்கப்பட்டுள்ள இந்தியர்களை விடுதலை செய்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவதென்ற போர்ச்சுக்கலின் யோசனையுடன் போர்ச்சுக்கீஸியரைத் திருப்பி அழைக்கும் விஷயத்தை போர்ச்சுக்கல் ஒன்ருக இணைத்துள்ளதென்று தோன்றுவதாக திரு. நேரு கூறினர்.

போர்ச்சுக்கீஸியரைத் திருப்பிஅழைப்பதும் இந்தியரை விடுதலை செய்வதும் வெவ்வேறு விஷயங்களாக இந்தியா கருதுகிறதென்று பிரதமர் சொன்னர்.

காவலிலுள்ள இந்தியர்களை ஒரு கப்பலில் ஏற்றி இந்தியாவுக்கு அனுப்புவதாகவும் அதே கப்பலில் போர்சுக்கீஸியரைத் திருப்பி அனுப்பிவைக்கும்படியும் போர்ச்சுக்கல் தெரிவித்துள்ளதாம்.

போர்ச்சுக்கீஸியரைத் திருப்பி அழைத்துக்கொள்வதில் போர்ச்சுக்கல் இன்னும் தாமதம் செய்தால் கோவாவுக்கு வெளியேஓரிடத்தில் போர்ச்சுக்கீஸியரை முகாம்களில் வைப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனைசெய்யவேண்டி யேற்படும் என்று பிரதமர் நேரு அங்கத்தவர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

## இறக்குவானை பரியோவான் பாடசாலை

நக்குவானை, வெள்ளி

பரி. யோவான் பாடசாலைப் பெற்ருர் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் தலைமை ஆசிரியர் திரு. ஏ. கே. ராசேந்திரம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு உதவிக்கல்வியமைச்சரும் இறக்குவானைப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வி. டி. ஜி. கருணரட்ணு உட்படப் பல தமிழ்ப் பிரமுகர்களும் சமுகமளித்தனர்.

புதுவருட உத்தியோகத்தர் தேர்தலின்போது போஷகர்களாக உதவிக் கல்வியமைச்சர் திரு. கருணரட்ணு, மராமத்து ஓவசியர் திரு. பி. சபாரத்தினம், டாக்டர் எஸ். தெய்வேந்திரம் ஆகியோரும், தலைவராக தலைமை ஆசிரியர் இராசேந்திரமும், உப தலைவராக திரு. வி. தியாகராசாவும், காரியதரிசியாக திரு. சு. சிவநாயகமூர்த்தியும், உப காரியதரிசியாக திரு. பி. அழகர்சாமியும், தனதிகாரியாக திரு. ஏ. சுப்பையாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## அர்ஜன்டைனவில் எடின்பரோ கோமகன்

புவனஸ் அயர்ஸ் மார்ச் 23

அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள ஆர்ஜன்டைனவில், ஏற்கனவே திட்டமிட்ட படி தமது சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பிப்பதற்காக எடின்பரோகோமகன் இன்று புவனஸ் அயர்ஸ் வந்து சேர்ந்தார். அவரை பெருந்திரளான மக்கள் விமானநிலையத்தில் உற்சாகமாக வரவேற்றனர்.

## இலங்கைப் பெண்களுக்கு லண்டனில் பயிற்சி

லண்டன், மார்ச் 23

இலங்கை விமான நிலையத்திலிருந்து ஆறு விமான உபசரிப்பு மாதர்கள் இலங்கைப் பாதையில் பிரயாணம்செய்யவிருக்கும் பிரிட்டிஷ் வெளிநாட்டு எயர்வேய்ஸ் கூட்டுறவு கண்டுபிடித்த கொமட் விமானத்தில் சேவைசெய்யப் பயிற்சி பெறுகின்றனர். பி. ஓ. ஏ. ஸி. இலங்கை விமான நிலயத்துடன் ஒன்று சேர்ந்தே இலங்கையிலிருந்து லண்டனுக்கு கொமட் விமானசேவை மார்ச் 30-ம் திகதி தொடங்கும்.

லண்டன் விமானநிலையத்தில் ஆறு இலங்கைப்பெண்மணிகள் பி. ஓ ஏ. ஸி. பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி பெறுகின்றனர். எயர்கிருப்டில் இவர்கள் செய்தசேவையைப் போல் இருப்பதற்காக அதிகமான பயிற்சி வேலைகள் போல்யான கொமட்டில் செய்து பாக்கப் படுகிறது.

எல்லா விமான உபசரிப்புப் பெண்களும் இம்மாதக் கடைசியில் இலங்கை திரும்புவார்கள். இவர்களில் இருவர் 27 பயிற்சி பாடசாலை வீதி, கவலொக் டவுண் கொழும்பைச் சேர்ந்த செல்வி மேரிபெரன்ஞ்சரும், ரட்மலானைவைச் சேர்ந்த செல்வி ஜராங்கனி பெரராவும் நேற்று லண்டனில் தங்கள் வேலையைப் பற்றியும் பிரிட்டனைப் பற்றிய தம் அபிப்ராயத்தைப் தெரிவித்தனர்.

### வாரப்பரிசோதனை

வயதுடையவரும், கடந்த இரு வருடங்களாக இலங்கை விமானத்தில் கடமையாற்றிய வருமான செல்வி பெரன்ஞர் தற்போது தான் பெறும் பயிற்சி மிக உபயோகமானதென அறிந்தார் எனக் கூறினர். இன்றுவரை டிவிஜியில் பறந்து பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். பயிற்சிக் காலத்தில் பிரயாணத்தை மேற்கொண்டுள்ளோம். இப் பயிற்சியிலிருந்து நாம் யாபேரும் அதிகமான தகவல்களை அறியக்கூடியதாக இருக்கின்றது.

"ஒவவொரு வாரமும் எமக்குப் பரீட்சை உண்டு. எமக்கு அளித்த சொற்பொழிவுகள், பயிற்சி பெற்ற செயல் முறை வேலைகள் யாவற்றிலும் கேள்விகள். கேட்கப்படும். எம்மால் இயன்றவவு தகுதியுடைவர்களாக்குவதே இப்பயிற்சியின் நோக்கமென்று" அவர் கூறினர்.

செல்வி பெரன்ஞ்சருக்கு லண்டனில் இனத்தவர்களும், சிநேகிதர்களுமுண்டு. இவருடைய வருங்காலக் கணவன் லண்டன் இன்சூரன்ஸ் கம்பனியில் 5 வருட ஒப்பந்தத்தில் வேலை செய்கின்ருர். "இப் பயிற்சிக்கு ஆறு சாம்ராஜ்ய நாடுகளிலிருந்து பெண்கள் வந்துள்ளார்கள். இதனுல் மற்ற நாடுகளைப்பற்றி அறியவும், கருத்துக்களைப் பரிமாறவுமான நற்சந்தர்ப்பம் கிடைத்ததில் எனக்கு அளவில்லாத ஆனந்தம்" என்று கூறினர்.

### பிரயாணம் செய்யச் சந்தர்ப்பம்

வயதுடைய செல்வி பெரரா இலங்கை விமானத்தில் சேரமுன் அதாவது மூன்று வருடகாலத்திற்குமுன், சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளராக இருந்தார்.

இப் பயிற்சியில் நாணய நோட்டுப் பிரச்சினை, குடியேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம் முதலுதவிச் சிகிச்சை உட்பட மதுபானவிருந்து, உணவுகளைச் சேர்க்கும் வகையும் பயிற்சிக்கப்பட்டதெனக் கூறினர்.

அதிகமாக இலங்கை மங்கையரை விமான உபசரிப்பு மாது வேலையை ஏற்கக் கவருகின்றதென்று செல்வி பெரேரா கூறினர். "இவ் வேலையினல் பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்யவும், பல இன மக்களைச் சந்திக்கவும் நற்சந்தர்ப்பம் அளிக்கின்றது".

## மாணவர் வரலாற்றுக் குறிப்பு இன்றியமையாதது

யாழ்ப்பாணம், வெள்ளி

"பாடசாலைகளில் மாணவர்களைப்பற்றி ஆசிரியர்கள் குறிக்கும் வரலாற்றுக் குறிப்புகள் செவ்வனே எழுதப்பட்டிருப்பின் மாணவர் தம் சிறப்பியல்புகளைத் தாமே உணர்ந்து கொள்ள உதவிசெய்யும். மாணவரில் ஊக்கமுள்ள ஆசிரியர் பெற்ருேர்,பராமரிப்பாளர்,உத்தியோகம் வழங்குபவர் ஆகியோரும் மாணவரின் உண்மையான தகைமைகளை அறிய உதவும். மாணவருக்கேற்ற கல்வி தொழில் ஆதியனவற்றை நிர்ணயிக்கவும் இது பெரிதும் உதவுகிறது. ஆகவே மாணவரைப்பற்றிய வரலாற்றுக்குறிப்புகள் கிரமமாகவும் சரியாகவும் நிரப்பப்படல் இன்றியமையாகது."

பெருமாள் கோவிலடி ஆங்கில வித்தியாசாலை ஆசிரியர்கள் கூட்டத்தில் தொழில் வழிகாட்டி ஆசிரியர் திரு. கே. சோமசுந்தரம் மாணவனின் வரலாற்றுக் குறிப்புப்பற்றி விளக்கம் காட்டுமுகமாகச் சொற் பொழிவாற்றுகையில் இவ்வாறு கூறினர். பாடசாலை அதிபர் திரு. எஸ் விஜயரத்தினம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. சோமசுந்தரம் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

"வரலாற்றுக் குறிப்புகள் பதியும் பத்திரங்களிற் சில பகுதிகள் அந்தரங்கமாக இருக்க வேண்டியவை. இக் குறிப்புகளை மாணவருக்கோ ஏனையோருக்கோ காட்டக்கூடாது. மாணவனின் ஆற்றல்:தகைமை மன்வெழுச்சி, உடல்கூறு ஆதியனபற்றியும் இங்கே கூறப்படுகின்றது. இவற்றிலிருந்து மாணவனுக்குத் தொழில் ஆலோசனை கூறுவதற்கும், தொழிலுக்கு ஆயத்தப்படுத்துவதற்கும், வேலைக்கமர்த்துவதற்கும், வேலையில் அமர்ந்தபின் கண்காணிப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் உதவுகிறது.

## வானவெளியில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வாக அறிந்து கொள்ளும் பொருட்டு பூமியின் கதிர்வீச்சு அடுக்குகளின் ஆற்றல் கூட்டமைப்பை ஆராய்தல்; காஸ்மிக் கதிர்களின் மூலக் கூட்டமைப்பையும் அடர்த்தி மாறுபாடுகளையும் ஆராய்தல்; பூமியின் காந்தப்புலனை ஆராய்தல்; சூரியன், இதர அண்ட கோள்களின் குற்றலைக் கதிர்வீச்சை அறிதல்; வளி மண்டலத்தின் மேல் அடுக்குகளை ஆராய்தல்; அண்டவெளிக் கப்பல்களின் அமைப்புப் பொருள்களை விண்துகள் கண்எப்படி பாதிக்கின்றன என்பதை அறிதல்; பூமியின் வெளி மண்டலத்தில் மேகத்திரள்களின் விநியோகமும் அவை தோன்றிடும் முறையும் பற்றி ஆராய்தல்.

தவிரவும், அண்டவெளிக் கப்பல்களைக் கட்டுவதற்காகப் பயன் படுத்தப்படக் கூடிய பல பொருள்களும் சோதித்துப் பார்க்கப்பட்டு மேலும் மேம்படுத்தப்படும்.

வளி மண்டல மேல் அடுக்குகள், புற வெளி இவற்றின் பௌதிக இயலை ஆராய்ந்து அறிவதற்கு சோவியத் விஞ்ஞானிகளுக்கு இந்த விஞ்ஞான வேலைத் திட்டம் புதிய சாதனங்களைப் பெற்றுத்தரும்.

# பலாலி கொலைவழக்கில் எதிரிக்கு 4 வருடச் சிறை

யாழ்ப்பாணம், வெள்ளி

பலாலி கொலை வழக்கில் முதலாம் எதிரியான வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளைக்கு நான்கு வருட கடுழியச் சிறைத் தண்டனையும் இரண்டாம் எதிரியை விடுதலை செய்தும் நீதியரசர் டாக்டர் தம்பையா தீர்ப்பளித்தார்.

1961-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24-ம் திகதி சின்னப்பொடி சபாபதி என்பவரைக் கொலை செய்ததாக வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசரணை செய்யப்பட்டது.

இந்த வழக்கு இன்று காலை மீண்டும் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப் பட்டபோது முதலாம் எதிரியின் வழக்கறிஞர் திரு. சத்துருகுலசிங்கி முதலாம் எதிரியின் சார்பில் முதலாம் எதிரி கைமோசக் கொலை புரிந்த குற்றத்தை ஒப்புக்கொள்வதாககோர்ட்டில் தெரிவித்தார்.

ஜூரிமார் இந்த விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்டதன் பேரில் முதலாம் எதிரிக்கு 4 வருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாம் எதிரிக்கு மாருகவிருந்த குற்றச் சாட்டை முடிக்குரிய வழக்கறிஞர் வாபஸ்பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் அவர் மீதான வழக்கைத் தள்ளுபடி செய்து இரண்டாம் எதிரியை விடுதலை செய்தார்.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானர்.

முதலாம் எதிரியின் சார்பில் திரு. ஈ. பி. சத்துரு குலசிங்கி திரு. டி. கணேசலிங்கத்தின் உதவியுடன் திரு. ஏ. நித்தியானந்தன், திரு. ஏ. டி. துரையப்பா ஆகியோரின் அனுசாரணையுடன் ஆஜரானர்.

இரண்டாம் எதிரியின் சார்பில் திரு. டி. கணேசலிங்கம் திரு. ஏ. நித்தியானந்தன் திரு. ஏ. டி. துரையப்பா ஆகியோரின் அனுசாரணையுடன் ஆஜரானர்.

## 5 இந்தியரும் விடுதலை

புதுடில்லி, மார்ச் 23

கோவா விடுதலைக்கு பாரதம் நடவடிக்கை எடுத்த சமயத்தில் லிஸ்பன் வழியாக விமானத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஐந்து இந்தியர்கள் லிஸ்பனில் போர்ச்சுக்கீஸிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் இப்பொழுது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இத் தகவலை உதவி வெளிநாட்டு அமைச்சர் திருமதி லட்சுமி மேனன் லோகசபையில் இன்று தெரிவித்தார்.

## சமயப்பணியில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தியின் ஆற்றலை உலகுக்குணர்த்தினர்.

### அன்பு நெறி

இறவாத பேரின்பமாகிய அன்பு நெறிப் பட்டு பிறவாமை யென்னும் நல்வரம் பெற்று இறைவன் திருவடியின் கீழே சிவானந்தத்தை உடையவராகிக் காரைக் கால் அம்மை பக்தர்களுக்கு வழிகாட்டியாக மிளிர்கின்ருர். மனமாசு நீக்கி உண்மையைக் கடைப் பிடித்து ஒழுகுதலே மனித வாழ்க்கையின் நோக்கு என்ற அம்மையின் கருத்தை நாமும் உணர்வோமாக. சமய வாழ்க்கை வாழ்ந்து காட்டிய பொய்யடிமையில்லாச் சான்ருேர்களினல் நாமும் உய்தி பெற முயல்வோமாக.

—'சர்மா

## பேச்சு வார்த்தை ஒத்திவைப்பு

வாஷிங்டன், மார்ச் 23

மேற்கு இரியான் சம்பந்தமாக இந்தோனேஷியப் பிரதிநிதிகளும் டச்சு அரசாங்கப் பிரதிநிதிகளும் இங்கு இரகசிகமாக நடத்திவந்த மகாநாடு தங்கள் அரசாங்கங்களுடன் ஆலோசனை நடத்துவதற்காக ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

## திட்டம் பரிசீலனை

ஜெனிவா, மார்ச் 23

17 நாடுகளின் படைகுறைப்பு மகாநாட்டில் சோவியத் யூனியனும், அமெரிக்காவும் தனித்தனியாகச் சமர்ப்பித்த படைகுறைப்பு யோசனைகளை மகாநாடு இன்று அம்சம் அம்சமாகப் பரிசீலனைசெய்ய ஆரம்பித்தது.

## ஈச்மனின் வழக்கு

ஜெருசலம், மார்ச் 23

லட்சக்கணக்கான யூதர்களைப் படுகொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட அடோல்வ் ஈச்மனின் அப்பீல் விசாரணை நேற்று ஜெருசலம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இன்று இரண்டாவது நாளாக நடைபெற்ற விசாரணையில் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஈச்மனின் வழக்கறிஞர் தமது அப்பீல் உரையை முடித்துக்கொண்டார்.

அப்பீல் விசாரணையில் ஈச்மனின் வழக்கறிஞர், உரைநிகழ்த்துகையில் அதிகாரிகளின் உத்தரவுகளினுல்தான் ஈச்மன், யூதர்களைக் கொலை செய்தார் என்றும், ஈச்மனுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## பல்கலைக்கழக பரீட்சை நடைபெறும்

பேராதனை, வெள்ளி

பேராதனைப் பல்கலைக்கழகப் பரீட்சை, திட்டமிட்டபடி நடக்கும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக பல்கலைக் கழக துணைவேந்தர் நிக்கிலஸ் அட்டிகல, கல்வி மந்திரிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் நோயினல் பீடிக்கப்பட்ட மாணவர்கள் பலர் குணமடைந்துவிட்டார்கள் என்றும், குறிப்பிட்ட திகதியில் நடத்ாது, பரீட்சைகளை ஒத்திப்போடுவதை மாணவர்கள் விரும்பவில்லையென்றும் பரீட்சை நடைபெறுவதில் மாற்றமெதுவுமில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் நிலக்கரி தொழில்

புதுடில்லி, மார்ச் 23

1961 டிசம்பர் மாதத்தில், மொத்தம் 844 நிலக்கரிச் சுரங்கங்கள் இயங்கி வந்ததாகவும், அவற்றில் தினந்தோறும் சராசரியாக மொத்தம் 3,98,239 தொழிலாளர்கள் வேலைசெய்து வந்ததாகவும், யூனியன் தொழிலாளர் நல-வேலையளிப்பு காரியாலயத்தைச் சேர்ந்த பிரதம சுரங்க இன்ஸ்பெக்டர் அறிவித்திருக்கிருர். முந்திய மாதத்தில் மொத்தம் 854 சுரங்கங்கள் இயங்கி வந்தன. அவற்றில் நாள் ஒன்றுக்கு சராசரியாய் மொத்தம் 3,95,471 பேர் வேலை செய்து வந்தனர்.

# கண்டி ஆஸ்பத்திரியில் மருந்துக்கு தட்டுப்பாடு

கொழும்பு, வெள்ளி
கண்டி ஆஸ்பததிரியில் இளம் பிள்ளை வாதநோய்த் தடுப்பு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், கண்டியிலுள்ள பிள்ளைகளுக்குத் தடுப்புப்பால் கட்டமுடியாதிருக்கிறதாம்.

கண்டி நகரசபை எல்லைக்குள் உள்ள ஒரு பிள்ளைக்கு இளம்பிள்ளை வாதநோய் கண்டிருப்பதாக நகரசபைச் சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நோய்த்தடுப்பு மருந்து இல்லாத ஊர்களுக்கு இயலுமான அளவுக்கு மருந்து அனுப்பி வைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாக சுகாதார இலாகா வட்டாரங்கள் கூறுகின்றன. பிரிட்டனிலிருந்து இங்கு வந்த தடுப்பு மருந்து 'ஸ்டாக்குகள்' பலபாகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன. 50,000 பேருக்கு ஏற்றக்கூடிய தடுப்புமருந்து பிரிட்டனிலிருந்து வந்துசேர்ந்துள்ளது. ரஷ்யாவும் இந்த மருந்தை வெகு விரைவில் இங்கு அனுப்பிவைக்கும்.

கண்டியில் முன்னர் எவருக்கும் இளம்பிள்ளை வாதநோய் காணப்படாததால், தடுப்புமருந்து அங்கு அனுப்பிவைக்கப்படவில்லை.

# நீர்வேலியில் சவாரிப்போட்டி

## முதற்பரிசு தங்கப்பதக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி
நீர்வேலி ஸ்ரீ விநாயக சனசமூக நிலையத்தின் ஆதரவில் அடுத்த மாதம் 22-ம் திகதி நீர்வேலியில் பிரமாண்டமான ஓர் வண்டிச்சவாரி, சைக்கிள் சவாரிப் போட்டி நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் வெற்றி பெறும் முதல் மூன்றிற்கும் பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. முதலாவது பரிசாக ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்படவிருக்கிறது.

நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் நடைபெறவிருக்கும் இப்போட்டிக்கு ஸ்தல ஸ்தாபன உதவி அதிபர் திரு. என். சிவராசா தலைமை தாங்குவார்.

## அதிபர் இல்லாத தபாற்கந்தோர்

ரிக்கிலஸ்கட, வெள்ளி
கண்டிக்குச் சமீபத்திலுள்ள வத்துவெலா உப தபாற்கந்தோரில் கடந்த ஒருவருடமாக போஸ்ட்மாஸ்டர் இல்லை. எத்தனையோ படித்த இளைஞர்கள் வேலையற்று இருந்தபோதும், பெப்ரவரி 61-ல் காலியாகிய இந்த ஸ்தானத்துக்கு எவரும் அமர்த்தப்படவில்லை.

உப தபாற்கந்தோரில் போஸ்ட்மாஸ்டர் ஸ்தானம் காலியாகியதுபற்றி தபால் இலாகா விளம்பரம்செய்தது. கடந்த ஆகஸ்டில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் எனினும் நியமனம் வழங்கப்படவில்லை.

இப்போது வத்துவெலா உப தபால் கந்தோரில் தற்காலிகமாக ஒருவர் போஸ்ட்மாஸ்டர் பதவியிலிருந்து வருகிறார்.

## கொழும்புத்துறைக்கு ஒரு மருந்துச்சாலை

### அமைச்சருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், வெள்ளி
கொழும்புத்துறையில் ஒரு நிரந்தர மருந்துச்சாலையைத் திறந்து நிரந்தரமாக ஒரு அப்போதிக்கரி தினமும் பார்வையிட நடவடிக்கை யெடுக்குமாறு கொழும்புத்துறை கிழக்கு சனசமூகநிலையம் சுகாதார அமைச்சரைக் கேட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி அங்கிருந்து இரண்டரை மைல்களுக்கப்பால் இருப்பதால் பாஷையூர், ஈச்சமட்டை, பாண்டியன்தாழ்வு, கண்டிக்குளி ஆகிய இடங்களிலுள்ள பொதுமக்கள் அண்மையில் ஓர் மருந்துச்சாலை இல்லாமையால் கஷ்டப்படுவதாக அதில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கொழும்பு நகரசபை அங்கத்தவர்கள் வெளிநாடு செல்கின்றனர்

கொழும்பு, வெள்ளி
கொழும்பு நகர சபையின் 14 அங்கத்தவர்களைக்கொண்ட ஒரு தூது கோஷ்டி மேயர் எம். எச். எம். முகம்மது தலைமையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் செய்யவிருக்கிறது.

இம்மாதம் 29-ந் திகதி இத்தூதுகோஷ்டி புறப்படும்.

திருவாளர்கள் எம். வின்சனட் பெரேரா, ஏ. எச். மாக்கான் மாக்கார், எம். டி. கிச்சிலான், எம். பலீல் ஏ. சபூர், எம். டி. பெர்னண்டோ, ஏ. எச். எம். பௌஸி, ஏ. எம். கபீர், ஜி. பி. பெரேரா, வி. ஜி பி. பெரேரா, ஏ. பிரேமசிங்கா, ஜே. எப். தேவபுரா, ஆர். பிரேமதாசா, டாக்டர் ஏ. எப். ஜே. காசிசெட்டி ஆகியோர் இத்தூதுகோஷ்டியில் செல்வர்.

## 4 வயதுச் சிறுவன் விபத்தில் மரணம்

பையாகலை, வெள்ளி
தெரு வீதி விபத்து காரணமாக ஒரு 4 வயதுச்சிறுவன் மரணமானன். சைக்கிள் ஓட்டிச் சென்ற இருவர்கள் படுகாயமுற்றனர்கள்.

கலமுல்லாவைச் சேர்ந்த டி. டி. ஜோசப் பெர்னண்டோ என்பவரும், வாரப்பிட்டியாவைச் சேர்ந்த கீக்கியனகே மாட்டின் என்பவருமே காயமுற்ற சைக்கிள் சாரதிகர் இருவரும் நகொடை ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்[illegible]னர்கள்.

## நீரில் மூழ்கி மரணமானர்

மட்டக்களப்பு, வியாழன்
மன்னம்பிட்டி அரசினர் மருந்துச் சாலையைச் சேர்ந்த அப்போதிக்கரியான திரு. வி. செல்வரத்தினம் மகாவலிகங்கையில் தமது மனைவியுடன் நீராடச் சென்றிருந்த சமயம் நீரில் மூழ்கி மரணமானர். இச்சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் பாராக்கிரம சமுத்திரத்தில் வேறு ஒருவர் நீரில் மூழ்கி மரணமானர்.

## இலங்கைநாட்டிய சங்கீத சங்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி
இலங்கைநாட்டிய சங்கீத சங்கத்தின் 6-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் வெள்ளவத்தை வைஸ்யங்கையர் கழக மண்டபத்தில் இம்மாதம் 25-ம் திகதி மாலை நடைபெறவிருக்கிறது. புதுவருட உத்தியோகத்தார் தேர்தலையடுத்து இசை விருந்தும், இரவு விருந்துபசாரம் நடைபெறவிருக்கிறது.

## "எம்.பி. க்களின் அலுவல்"

பையாகலை, வியாழன்
'முன்பு போலல்லாது இப்பொழுது எம். பி. க்கள் முழு நாளும் வேலைசெய்ய வேண்டியுள்ளது" என்று வேருவலை எம். பி. ஜனப் எம். ஐ. ஏ. காதர் ஹல்கடுவ-பையாகலை அரசினர் கலவன் பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"நான் எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்ட நாளிலிருந்து நான் பெற்ற அனுபவத்தில், மக்கள் தங்களின் சொந்த சிறு அலுவலையும் எம். பி. யேவனிக்க வேண்டுமென்று விரும்புவதை அறிந்துகோண்டேன்" என்று ஜனப் காதர் தெரிவித்தார்.

தங்கள் சொந்த அலுவல்களுக்கு எம். பி. யை உபயோகிப்பதற்குப் பதிலாக பொதுவான தேசிய அலுவல்களுக்கு எம். பி. யைப் பயன் படுத்த வேண்டுமென்று ஜனப் காதர் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

## ரேடியோ நொருங்கியது

### மின்னல் தாக்கி வீடுசேதம்

பலாங்கொடை, வியாழன்
கடும் வரட்சி நிலவிய இப்பகுதியில் நேற்று மாலை இடிமுழக்கத்துடன் பலத்த மழை பெய்தது.

மிரிஸ்வத்தை கிராமத்தில் ஒரு வீடு மின்னலால் தாக்குண்டது. வீடு சேதமடைந்ததுடன் ஒரு ஆடு ஸ்தலத்திலேயே மாண்டது. ரேடியோ கேட்டு ரசித்துக்கொண்டிருந்த ஒரு பெண்ணும் மூன்று பிள்ளைகளும் உயிர் தப்பினர். ஆனல் ரேடியோப்பெட்டி இடிசுக்கு நூறாக நொருங்கியது.

# ஸ்தலஸ்தாபன சபைகளின் அதிகாரங்கள்பற்றி ஆலோசனை

காங்கேசன்துறை, வெள்ளி
உள்ளூராட்சி அதிபர் திரு. டி. வி. மகிந்திலாவுக்கு வடபகுதி பட்டினசபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள் சங்கம் காங்கேசன்துறை வாடிவீட்டில் ஓர் தேநீர் விருந்துபசாரத்தை நடாத்தியது.

பின்வரும் விஷயங்கள் பற்றி இவர்கள் கலந்து உரையாடினர்:-

பட்டின சபை எல்லைக்குள் இருக்கும் பட்டின சபையால் பாவிக்கப்படும் முடிக்குரிய நிலங்களை பட்டினசபைகளுக்கு உரிமையாக்கவேண்டும்.

பட்டினசபைக்குத் தேவையான காணிகளை கட்டாய உரிமையாக்கும் விஷயத்தில் காணியின் பெறுமதி கட்டப்பட்டபின் தாமதமின்றி கூடியது 6 மாத கால எல்லையுள் பட்டினசபைகளுக்கு உரிமையாக்கவேண்டும்.

பட்டினசபை உத்தியோகத்தர்களின் இடமாற்றம் விஷயமாகத் தலைவர்களின் நியாயமான அபிப்பிராயங்களை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் அனுசரித்து மாற்றஞ் செய்ய வேண்டும்.

மதுவரிப் பணம், காணி கொள்வனவு, முத்திரை வரி ஆகியவற்றில் ஒருபகுதியைப் பட்டினசபைகளுக்குக்கொடுக்க வேண்டும்.

## ஆர்ஜன்டைனு புதிய அரசாங்கம்

புவனஸ் அயர்ஸ், மார்ச் 23
ஆர்ஜன்டைனுவின் புதிய அரசாங்கம் திங்கட்கிழமை பதவியேற்குமென்று அதிபர் மாளிகையிலிருந்து வெளியான அறிக்கை தெரிவிக்கிறது.


# உங்கள் தேகத்தின் ஒவ்வொரு அசைவும் ப்ரோட்டீன் புசிக்கின்றது



உங்கள் தேகம் அசையும் ஒவ்வொருபோதும், நீங்கள் தேக உஷ்ணத்தையும் சக்தியையும் இழக்கின்றீர்கள். உங்கள் தேகம் ப்ரோட்டீனை எரித்து, தேக உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணி, பிராணி தாவர உடலமைப்புப் பொருள்களை உருவாக்கி, உடைந்துபோன உடம்பு ஸெல்களை சரிபடுத்துகின்றது. ஆனல் உங்கள் தேகத்திற்கோ, ப்ரோட்டீன் சேமித்து வைக்கக்கூடிய சக்தி கிடையாது. எனவே, நீங்கள் தினமும் போதுமான ப்ரோட்டீன் உட்கொள்ள வேண்டும். இல்லையேல் — எப்படி ஒரு எண்ணெய் விளக்கின் திரி எண்ணெய் இன்றி தன்னைத் தானே எரித்துக்கொள்கிறதோ, அப்படியே நீங்களும் சீக்கிரத்தில் உங்கள் சொந்த உடலை எரித்து, சக்தி இழந்து, சோர்ந்து போவீர்கள்.




ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் சுத்தமான, கரையக்கூடிய, கொழுப்பற்ற ப்ரோட்டீனை எளிதில் ஜீரணிக்கக்கூடிய முறையில் கொண்டது. ஒன்று அல்லது இரண்டு சிறு புட்டி ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் தினமும் உட்கொள்ளுங்கள். விருப்பமானல், சிறிது வெந்நீருடன் கலந்து உட்கொள்ளுங்கள். டாக்டர்கள் இதை நோயாளிகளுக்கும், நோயிலின்று குணமடைபவர்களுக்கும், ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கும் சிபார்சு செய்கின்றனர்.

ஒவ்வொரு நாளும் தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு, அனுதினம் ப்ரான்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்.




ப்ரான்ட்ஸ்

எஸன்ஸ் ஒப் சிக்கன்

AT-712-3

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 24-3-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 ஏ. நமசிவாயம்—பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 பாட்டு, 10-15 நாட்டிய இசை.

ஞாயிறு 25-3-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 தேர்ந்த இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம்—24, 8-30 ஞானாஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயபாடசாலை, 9-30 கத்தோலிக்க நிகழ்ச்சி, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரைக்குரல், 6-15 கோவில் அஞ்சல்.

இரவு 7-15 மாதர் கேட்டவை, 7-30 கே. தங்கராஜா—பாட்டு. 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 'பழி'—நாடகம். 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

சனி 24-3-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ஆர். கே. உலகநாதன் — வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல். 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 ஆர். கே. உலகநாதன்—வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'அன்புள்ள லலிதா'—நாடகம், 8-40 இசை மாலை, 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

ஞாயிறு 25-3-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 டி. பி. ராமதாஸ் ஸொப்ராஞே ஸாக்ஸபோன், 8-15 விமலா கிருஷ்ணமூர்த்தி—பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 எம். ஜி. கௌரிகுமாரி—வீணை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 ஸ்ரீ வைகுண்டம் எஸ். பரமசிவம்பிள்ளை-பாட்டு, 8-30 டி. பி ராமதாஸ்-ஸொப்ராஞே ஸாக்ஸபோன், 9-15 வாத்திய இசை, 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

---

## நேபாளமன்னரின் இந்தியவிஜயம்

புதுடில்லி, மார்ச் 22

நேப்பாள மன்னர் மகேந்திர ஏப்ரல் முதல்வாரத்தில் அல்லது ஏப்ரல் கடைசியில் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்.

---

வலி.—கிழக்குப்பாடசாலைகள்

# உடற்பயிற்சிப் போட்டியில் சோமஸ்கந்தக் கல்லூரிக்கு வெற்றி

## சகல பிரிவிலும் மாகாணப் போட்டியில்கலந்துகொள்ள தகுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

வலிகாமம் கிழக்கு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி அமோக வெற்றியீட்டி இம் மாதம் 31-ம் திகதி யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவிருக்கும் மாகாணப் போட்டியில் பெண்களுக்கான மூன்று பிரிவிலும், ஆண்களுக்கான மூன்று பிரிவிலும் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளது.

13 வயதுக்குட்பட்ட ஆண்களு[க்கான போட்டியில் புத்]தூர் கல்லூரியுடன் சமமான புள்ளிகளைப் பெற்ற உரும்பராய் இந்துக்கல்லூரியும், 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் புத்தூர் கல்லூரியுடன் சம புள்ளிகளைப் பெற்ற அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியும மாகாணப் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெற்றிருக்கின்றன. 10 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உடற் பயிற்சிப் போட்டியில் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியே முதலாமிடத்தைப் பெற்றுள்ளது.

பெண்களுக்கான முப்பிரிவுப போட்டியிலும் புத்தூர் கல்லூரியே முதலிடத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

ஆண்களுக்கான மூன்று பிரிவிலும் பெண்களுக்கான மூன்று பிரிவிலும் புத்தூர் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. ஆகவே மாகாண இறுதிப் போட்டியில் மேற்கண்ட 6 பிரிவுகளிலும் பங்குபற்றத் தகுதிபெற்றுள்ளது.

வலிகாமம் கிழக்குப் பாடசாலைகளுக்கிடையேயான இப் போட்டி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கான உடற்பயிற்சிப் போட்டி இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

பிரிவுப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற பாடசாலைகள் இம் மாகாணப் போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படும்.

---

## பல்கேரியா அங்கீகரித்தது

ரபாட், மார்ச் 23

சுதந்திர அல்ஜீரிய அரசாங்கத்தை பல்கேரிய அரசாங்கம் சட்ட ரீதியாக நேற்று அங்கீகரித்தது.

---




# வாதநோய்தடுப்பு இயக்கம் திருப்திகரமாக செயல்படுகிறது

கொழும்பு, வெள்ளி

இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு இயக்கம் திருப்திகரமாக செயல்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது பற்றி சுகாதார பகுதி அதிகாரியொருவர் தெரிவிக்கையில் உட்கொள்ளும் மருந்தினல் அபாயம் எதுவுமில்லையென்றும் திறமையான முறையில் அது வெற்றியளித்திருக்கிறதென்றும் கூறினர்.

இளம்பிள்ளை வாதநோய், சென்ற 1952, 57-ம் ஆண்டுகளைவிட இவ்வருட்ம் அதிகமாகக் கண்டிருக்கிறது. இந்த நோய் 9 வருடங்களுக்கொரு முறை இங்கு பரவுவதாகத் தெரியவருகிறது. இந்நோயினல் 1957-ம் ஆண்டில் மொத்தம் 191 பேர் பீடிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாண்டு ஜனவரி முதல் இளம்பிள்ளைவாத நோயினல் 176 பேர் பீடிக்கப்பட்டிருக்கின்ருர்கள் என்றும் மொத்தம் 13 பேர் இறந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அதிசய நாய்க்குட்டி

மக்கோன, வெள்ளி

பொம்புவெல, நுகாகென தோட்டத்தைச் சேர்ந்த எச். எலாரிஸ் என்பவருக்குச் சொந்தமான நாய் ஒன்று அதிசய நாய்க்குட்டியைப் போட்டிருக்கிறது. இரண்டு கால்களையுடைய இந்த அதிசய நாய்க்குட்டியை ஏராளமானேர் பார்வையிடுகின்றனர்.

## வாதநோய் தடுப்பு ஊசி

இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ள விரும்புபவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட இடத்தில் தொடர்பு கொள்ளவும். ரோயல் பார்மஸி, பெரியகடை, யாழ்ப்பாணம்.

**POLIO VACCINE**

Please Contact, Royal pharmacy, Grand Bazaar, Jaffna.

## பிரமுகர்

கொழும்பு, வெள்ளி

துறைமுக கூட்டு ஸ்தாபனத்தின் முன்னுள் மனேஜராகக் கடமையாற்றிய திரு சி. மயில்வாகனம், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இறக்குமதி ஏற்றுமதி உதவிக் கட்டுப்பாட்டதிகாரியாக கடமையாற்றிய திரு ஏ. சி. துரைராஜா உயர்தர அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.


இன்று முதல் மகத்தான ஆரம்பம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த சிறந்த கலர் படம்!

பார்த்து பயன் அடையுங்கள்!



சித்திரா • அசாத்

கிருஷ்ணகுமாரி

நடித்த

ஜிம்போ

(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

மனோகரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு

சிவாஜி கணேசன் – பத்மினி நடித்த

மரகதம்

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும்

NOTORIUS

(ஆங்கிலம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## ஓடும் ரயிலில் கொள்ளை!

ஆக்ரா, மார்ச் 23

அலகாபாத் ஆக்ரா பாசஞ்சரில் முதல் வகுப்புப்பெட்டியொன்றில் ஆயுதங்களுடன் 3 பேர் புகுந்து பிரயாணிகளிடமிருந்து கொள்ளையடித்துச் சென்றனர். அந்தப் பெட்டியில் ஒரிஸ்ஸாவிலிருந்து வந்த யாத்ரீகர்கள் 9 பேர் இருந்தனர். இவர்களில் 4 பேர் பெண்கள். குபேர்து ஸ்டேசனுக்கு ரயில் போய்ச் சேரப்போகும் சமயத்தில் இக்கொள்ளைக்காரர்கள் தப்பிச் சென்றனர். பிரயாணிகளில் ஒருவர் அபாயச்சங்கிலியை இழுக்கச் சென்றபோது அவரைக் கொள்ளைக்காரர்கள் சுட்டனர்.

ஒரிஸ்ஸாவிலிருந்து வந்த 30 யாத்ரீகர் அலகாபாத்தில் ஏறினர். இவர்களில் 9 பேர் (இதில் 4 பேர் பெண்கள்) ஒரு பெட்டியில் ஏறினர். எட்மட்பூர் ஸ்டேஷனில் நன்ருக உடையணிந்த 3 இளைஞர்கள் இப்பெட்டியில் ஏறினர். வண்டி நகரத் தொடங்கியதும் இவர்கள் பிரயாணிகளிடம் கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். ஒரு பிரயாணி அபாயச்சங்கிலியை இழுக்க முயற்சித்தார். அவரை கொள்ளையர்கள் சுட்டனர். காயமுற்ற இந்த பிரயாணி ஆக்ரா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

ரயில்வே பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். இதுவரை இக்கொள்ளையர்களைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

## கலையரசுக்கு பாராட்டு விழா

கொழும்பு, வெள்ளி

தமிழ் நாடகத்துறையில் அறுபது ஆண்டுகள் சேவை செய்ததைப் பாராட்டும் முகமாக, கலையரசு சொர்ணலிங்கத்துக்கு ஒரு பாராட்டு விழாவை நடத்த மக்கள் கலைக்கழகம் முடிவு செய்துள்ளது.

இந்தப் பாராட்டு வைபவம், நாளை கொட்டாஞ்சேனை விவேகானந்தா பாடசாலையில் நடைபெறும்.

## கால்நடை காட்சி மந்திரி திறந்துவைத்தார்

திருச்சூர், மார்ச் 23

தமிழ்நாட்டு நிதி அமைச்சர் திரு. பக்தவத்சலம், நேற்று திருச்சூரில் கால்நடைக் காட்சியைத் திறந்து வைத்தார். கால்நடைக் காட்சி நான்கு நாட்களுக்கு நடைபெறும்.

## பெரியாறு தண்ணீர் பட்டம் கைவிரிப்பு

திருவனந்தபுரம், மார்ச் 23

பெரியாறு தண்ணீரில் தமிழ் நாட்டுக்கு இனியும் கொடுக்க முடியாதென்று கேரள முதன் மந்திரி திரு. பட்டம்தாணுப்பிள்ளை இன்று அறிவித்தார்.

பெரியாறு தண்ணீரில் இப்பொழுது தமிழ்நாட்டுக்குக் கிடைக்கும் தண்ணீர் தமிழ் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய பங்கீட்டைவிட அதிகமாகவே கிடைக்கிறதென்றும் இதற்கு மேலும் தமிழ்நாட்டுக்கு பெரியாறுதண்ணீர் கொடுக்கப்பட முடியாதென்றும் முதன் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளை தெரிவித்தார்.

## சுதந்திரா கட்சி அங்கீகாரம்

புதுடில்லி, மார்ச், 23

குஜராத் சட்டசபையில் சுதந்திராக் கட்சி எதிர்க்கட்சியாக இன்று அங்கீகரிக்கப்பட்டது. 152 அங்கத்தவர்களைக் கொண்ட குஜராத்சட்டசபையில் சுதந்திராக்கட்சியை சேர்ந்த 25பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

சென். ஜோன்ஸ் மத்தியகல்லூரி 64-வது கிரிக்கட் போட்டி

# பல்லாயிரக்கணக்கானேர் நேற்று கண்டுகளித்தனர்

## இன்று வெற்றி தோல்வி முடிவாகும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும்யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் மத்திய கல்லூரி மைதானத்தில் 64-வது வருடாந்த கிரிக்கெட் போட்டி நேற்று நண்பகல் ஆரம்பமானபோது சுமார் பல்லாயிரத்துக்கு மேலான ரசிகர்கள்போட்டியைக் கண்டுகளித்தனர். இந்த ஜனத்தொகையிலும் பார்க்க ஆயிரக்கணக்கான மேலதிகமான ரசிகர்கள் இன்று தொடர்ந்து நடைபெறும் போட்டிக்கு சமுகமளிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது,

வடமாகாணத்தில் இதுவரை இந்தப் பருவத்தில் ஒரு கோஷ்டியுடனும் தோல்வியடையாத மத்திய கல்லூரி எதிர்பாராத விதமாக தமது முதலாவது இன்னிங்ஸில் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 87 ஓட்டங்களை மட்டும பெற்றது. மத்தியகல்லூரி தங்களது முதல் இரு விக்கெட்டுகளையும் 9 ஓட்டங்களைப் பெற்றபோது இழந்தது. இந்நிலையில் மத்திய கல்லூரி 'காப்டன்' தமது கோஷ்டிக்கு 16 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து தமது கோஷ்டியை இக்கட்டான நிலையிலிருந்து காப்பாற்றினர். மத்திய கல்லூரியின் சிறந்த பந்தெறி வீரரான வீ. டி. மகாலிங்கமும் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 27 ஓட்டங்களைத் தமது கோஷ்டிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சிறந்த பந்தெறி வீரர்களான டபிள்யூ. டி. ராஜ்குமார், பி. கனகதுரை, டி. வைரவிப்பிள்ளை ஆகிய மூவரும் திறமையாகப் பந்தெறிந்து 26, 41, 14 ஓட்டங்களைக் கொடுத்து முறையே 4, 3, 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

பலத்த நம்பிக்கையுடன் சென். ஜோன்ஸ கல்லூரி வீரர்கள் தங்கள் முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடச் சென்ற போதிலும் அவர்கள் தங்கள் முதலாவது விக்கெட்டை (காப்டன் செல்வநாயகம்) ஒரு ஓட்டத்தையும் பெருது இழந்தனர். எனினும் தங்கள் நம்பிக்கையை இழக்காமல் விளையாடியதால் 6 விக்கட் நஷ்டத்திற்கு 106 ஓட்டங்களைப் பெற்றனர். இந்த ஓட்டங்களில் ஆர். ஜே. ஜெகநாதன், டி. ஜே. என். செல்வத்துரை, ஆர். தம்பிஐயா, பி. கனகதுரை ஆகியோர் முறையே 32, 19, 14,14 ஓட்டங்களைப் பெற்றனர்.

மத்திய கல்லூரியைச் சேர்ந்த வி. டி. மகாலிங்கம், டி. பி. பத்மதேவா ஆகியோர் 41, 17 ஓட்டங்களைக் கொடுத்து முறையே 4, 2 விக்கட்டுகளைக் கைப்பற்றினர்.

சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆர். என். சேதுகாவலர், சி. ஆனந்தகிருஷ்ணன் ஆகியோர் நேற்றுப் போட்டி முடியும் வேளையில் முறையே 15, 3 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

மீண்டும் போட்டி இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்போது இவ்விருவரும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடுவர்.

## இலங்கை வேண்டுகோள்

கொழும்பு, வெள்ளி

இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்து அனுப்புமாறு மேலும் பல நாடுகளுக்கு இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ரஷ்ய அரசாங்கம் அனுப்புவதாகத் தெரிவித்துள்ள ஊட்டமருந்து ஞாயிற்றுக்கிழமை வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

## இறுதி ஆட்டம்

யாழ்ப்பாணம, சனி

தையிட்டிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் இரண்டாவது கைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் ஸ்ராஸ் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் உடுவில் ஸ்ரார்ஸ் கழகமும் சுன்னுகம் ருெக்கட் கழகமும் கலந்து கொள்கின்றன.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

தேசிய ஆஸ்பத்திரி சுவீப்பின் 171-வது இழுப்பு முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

24 V 0928 ரூ. 71,700

இரண்டாவது பரிசு

01 Q 0738 ரூ 35,850

மூன்ருவது பரிசு

21 K 0349 ரூ. 17,925

சீட்டு ஒன்றுக்கு ரூ.717 பரிசாகப் பெறும் ஏனைய 25 சீட்டு இலக்கங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 21 Z 0239 | 15 V 0788 |
| 02 Y 0292 | 11 E 0802 |
| 22 G 0819 | |
| 12 O 0494 | 12 P 0818 |
| 19 B 0386 | 01 O 0832 |
| 09 K 0626 | |
| 13 Q 0108 | 13 D 0250 |
| 18 Q 0504 | 09 M 0412 |
| 16 D 0171 | |
| 14 J 0490 | 15 F 0122 |
| 04 F 0278 | 12 Z 0083 |
| 01 Z 0649 | |
| 05 T 0489 | 15 B 0624 |
| 16 N 0729 | 15 K 0727 |
| 03 M 0729 | |

## சிழவியிடம் சிசுவை விட்டு யுவதி மறைந்தாள்!

திருவனந்தபுரம், மார்ச் 23

உதவி செய்யப்போன கிழவி உபத்திரவத்தில் மாட்டிக் கொண்ட ஒரு சம்பவம் பற்றி தகவல் கிடைத்துள்ளர்.

கல்லூரி மாணவி போன்றிருந்த ஒரு பெண் இக்கிழவியின் கையில் பச்சிளங் குழந்தையொன்றைக் கொடுத்து விட்டு மறைந்துவிட்டாள்.

புலமான் ரஸ்தா சந்திப்பில் வயதான ஒரு ஸ்திரி நின்றுகொண்டிருக்கும் பொழுது பரபரப்புடன் ஒரு இளம் பெண் இவரை நோக்கி ஓடி வந்ததாகவும், அவசரமாகச் செல்லுவதாகவும், அதுவரையில் இந்தக் குழந்தையை வைத்திருக்கும்படி உதவி கோரியதாகவும் கூறப்படுகிறது. கபடமில்லாத மூதாட்டி உடனே குழந்தையை வாங்கிக் கொண்டார். ஆனல் அப்பெண்ணே அங்கு வந்த பஸ் ஒன்றை நிறுத்தி அதில் ஏறிச் சென்று விட்டாள்.

கிழவிக்குக் கிடைத்த பரிசு கைக்குழந்தையாக இருந்தாலும், இருவரையும் துன்பத்தில் ஆழ்த்திவிட்டு அப்பெண்மணி தப்பிச் சென்றுவிட்டார்.